விலை: 50.00
பக்கங்கள் : 12 + 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 112 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 27 ஞாயிற்றுக்கிழமை (10.04.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே



# ஜனாதிபதி செயலகம் மக்களால் முற்றுகை

## கொழும்பு - காலிமுகத்திடலில் தன்னெழுச்சிப் போராட்டம்



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாவை பதவி விலகக்கோரி கொழும்பு காலிமுகத் திடலில் நேற்று பாரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களால் ஜனாதிபதி செயலகம் முற்றுகையிடப்பட்டது.

(11ஆம் பக்கம் பார்க்க)

போராட்டக்காரர்களின்

## தொலைத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டன



(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக நேற்று காலிமுகத் திடலில் முன்னெடுக்கப் பட்ட போராட்டத்தில் பெருந்திரளா னோர் பங்கேற்று தங்களு டைய எதிர்ப்பை வெளிக் 11

## இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு

வடக்கு உட்பட 21 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

வட மாகாணம் உட்பட கடுமையான மின்னல் மற்றும் இடியுடன் கூடிய மழை பெய் 11

அடுத்த வாரம்

## ஜனாதிபதி விசேட உரை

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டபாய ராஜ பக்ஷ அடுத்த வாரம் விசேட உரையாற்றவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

பொருளாதார நெருக்கடியில் அரசுக்க 11

ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணமான

# சதிகாரர்கள் யார் என்பது வெளிச்சத்துக்கு வருகின்றது

## ஆர்ப்பாட்டத்தில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை



(கொழும்பு) ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதலுக்கு காரண மான சதிகாரர்கள் யார் என்பது தற்போது வெளிச்சத்துக்கு வருகின்றது என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்களை முன்னிறுத்தி அதிகாரத்தை பெற்றுக்கொள்பவர்களால் நீண்டகாலம் அதிகாரத்தில் இருக்க முடியாது என்பது நிரூபணமாகிறது என்றும் கொழும்பு பேராயர் சுட்டிக்காட்டினார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

11, 12ஆம் திகதிகளில்

## வங்கிகள் திறக்கப்படும்

(கொழும்பு)

நாளை 11ஆம் திகதி மற் றும் நாளை மறுதினம் 12ஆம் திகதிகளில் வங்கிகள் திறக்கப் படும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள் ளது. 11

போராட்டத்தின் இடையே

## நோன்பு துறக்கும் நிகழ்வு



(கொழும்பு)

கொழும்பு, காலி முகத்திடலில் ஜனாதி பதி மற்றும் அரசாங் கத்துக்கு எதிராக நேற்று இடம்பெற்ற பாரிய போராட்டத் 11

அரசுக்கெதிரான எதிர்ப்புகள் உயர்வடைந்த நிலையில்

## மைத்திரியை சந்தித்த சீனத் தூதுவர்



(கொழும்பு)

முன்னாள் அரச தலைவர் மைத்திரி பால சிறிசேனவை இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் ஜென் ஹாங் நேற்றைய தினம் திடீரென சந் தித்துள்ளார்.

இவர்கள் நாட் டின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் கலந்துரை 11

அடுத்த 6 மாதங்களுக்கு தேவையான

## அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதிக்கு 3 பில்லியன் டொலர் தேவை

### நிதி அமைச்சர் அலி சப்ரி



(கொழும்பு)

அடுத்த 6 மாதங்களுக்கான எரிபொருள், மருந்துகள் உள் ளிட்ட அத்தியாவசிய பொருட்களை இறக்கு மதி செய்வதற்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படு 11

## சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ள

அமெரிக்கா செல்லும் இலங்கைப் பிரதிநிதிகள்

(கொழும்பு)

இலங்கை பிரதிநிதிகள் குழு வொன்று எதிர்வரும் 18ஆம் திகதி அமெரிக்காவின் வோஷிங் டன் நோக்கி பயணிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்து டன் பேச்சுவார்த்தை மேற்கொள் வதற்காக குறித்த குழுவினர் பயணமாகவுள்ளனர்.

இந்த பேச்சுவார்த்தை 5 நாட்களுக்கு நடை 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## திரு. இராமநாதன் பாலச்சந்திரன்

( சந்திரன், பாலா )

( யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுபெற்ற ஊழியர் - மருத்துவபீடம் )

வதிரி, கதிர்காம கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. இராமநாதன் பாலச்சந்திரன் அவர்கள் நேற்று முன்தினம் (08.04.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கிருஷ்ணன் (முத்து) - செல்வநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும் விமலநாயகி (விமலா) அவர்களின் அன்புக் கணவரும் அஜந்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - யா/ மண்டைதீவு மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்), ஆதர்ஷன் (கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷன் (Customer Care Officer - Singer Service, Kondavil) அவர்களின் அன்பு மாமனாரும் விபிக்ஷாவின் அன்புப் பேரனும் தவமணிதேவி, காலஞ்சென்றவர்களான தவமலர், தங்கராணி மற்றும் சிவகுமார், யோகேஸ்வரன், தெய்வேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கமலநாயகி, தேவறஞ்சினி (சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்), மனோறஞ்சினி (ஆசிரியை - விவேகானந்தா கல்லூரி, கொழும்பு), ஸ்ரீறஞ்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கரவெட்டி), தவச்செல்வன் (கனடா), தவரூபன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.04.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் வதிரி பெரியபாதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-4149)

கதிர்காம கோவிலடி, வதிரி.

ஆது (மகன்) - 076 928 4111
கிருஷன் (மருமகன்) - 076 373 9408

தகவல் :- குடும்பத்தினர்

# அமைதியான போராட்டங்களுக்கு அரசு மதிப்பளிக்க வேண்டும்

## இலங்கை நிலைவரம் குறித்து கனடா

(ரொரண்டோ)

இலங்கையில் சீரழிந்துவரும் பொருளாதார நிலை மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை குறித்து ஆழ்ந்த கவலை அடைவதாக கனடா தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அமைதியான முறையில் போராட்டம் நடத்தும் உரிமைக்கு அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும் என கனேடிய வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி தெரிவித்துள்ளார்.

இந்த கடினமான காலத்தில் இலங்கை மக்களோடு கனேடியர்கள் இருப்போம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதே வேளை தொடரும் போராட்டங்களின் விளைவாக கனடா, அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கான பயண எச்சரிக்கைகளை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-7)


## வேலையாள் தேவை

இயக்கச்சியில் உள்ள தென்னந் தோப்புக்கு அங்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு வேலையாள் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும். (10979)

077 200 0230
077 883 6969

## சொர்க்கம் திருமண சேவை

கனடாவில் வாழும் 32 வயது, சுவாதி நட்சத்திர 8 இல் செவ்வாய் குற்றமுடைய மணமகனுக்கு யாழ்ப்பாணத்து மணமகளையும் கனடாவில் வாழும் 38 வயது, செவ்வாய் குற்றமற்ற உத்திராட நட்சத்திர மணமகனுக்கு மணமகளையும் இலங்கையில் தேடுகின்றோம். (10977)

0014166661855
077 887 6969, 077 650 5097

## காணி விற்பனைக்கு

600 தென்னை மரங்களுடன்கூடிய இயக்கச்சியில் உள்ள A9 வீதிக்கு அருகாமையில் காணி விற்பனைக்கு உண்டு.
128 பரப்பு, வீடு, தண்ணீர் தாங்கி, Solar மின்சாரம்,
100 பாக்கு மரம், 100 வாழை மரம், 50 மாமரம்.
விலை பேசித் தீர்மானிக்கப்படும். (10978)

077 200 0230
077 887 6969

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# மரண அறிவித்தல்



## திருமதி கிரேஸ் ஞானதிரவியம் தில்லைநாதன்

துன்னாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிரேஸ் ஞானதிரவியம் தில்லைநாதன் அவர்கள் 07.04.2022 அன்று காலமானார்.

அன்னார் திரு.திருமதி சரவணமுத்து தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற தில்லைநாதனின் மனைவியும் விஜேந்திரநாதனின் அன்புத் தாயாரும் செல்வேந்திரன் (கணக்காய்வாளர் - USA), ஞானேந்திரன் (பொறியியலாளர் - Canada), கருணேந்திரராசா (விரிவுரையாளர் - USA), திரவியராசா, (குடும்பநல வைத்தியர் - Australia), ஞானசெல்வம் (முன்பள்ளி ஆசிரியர்), ஞானோதயம் (இளைப்பாறிய ஆசிரியர்), ஞானசோதி (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நல்லையா நல்லநாதனின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் துன்னாலை தெற்கு, கரவெட்டி இல்லத்தில் இன்று (10.04.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை தேவாலயத்துக்கு எடுத்துச் சென்று வழிபாடு நடத்தப்பட்டு கட்டைவேலி மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துன்னாலை தெற்கு (C-4150) தகவல்: சகோதரர்

# 45ஆம் நாள் நினைவுதின அழைப்பு




கடந்த 26.02.2022 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர் யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ்

அவர்களின் சிவப்பேறு குறித்த 45ஆம் நாள் ஆத்ம சாந்திக் கிரியைகள் நாளை (11.04.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்வினைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

அவர்களின் இறுதிக் கிரியைகளின்போது எமக்கு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையங்கள் அனுப்பி வைத்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை தயாரித்து அனுப்பியவர்களுக்கும் மற்றும் எம்முடன் தோளோடு தோள்நின்று சகல விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிய அன்புள்ளங்களுக்கும் உதைபந்தாட்ட நண்பர்களுக்கும் பொதுமக்கள் அனைவருக்கும் எமது நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(10980)

[illegible] ச.ச. நிலையத்தடி, வல்வெட்டி.

076 652 1790

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டங்கள் மீதான அடக்குமுறைக்கு ஐ.நா. நிபுணர்கள் கண்டனம்

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கையில் நடத்தப்பட்ட சில போராட்டங்கள் மீதான ஒடுக்குமுறைக்கு ஐ.நா. மனித உரிமை நிபுணர்கள் குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

அமைதியான முறையிலான ஒன்றுகூடல் மற்றும் போராட்டங்களின் போது கருத்து தெரிவிப்பதற்காக உரிமைகளை உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் போராட்டக்காரர்களைக் கலைக்க கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகத்தை அதிகமாகப் பயன்படுத்துவதையும் கண்டிப்பதாக அறிவித்துள்ளது.

வெளிநாட்டுக் கடன், ஊழல் மற்றும் கொரோனா நெருக்கடி ஆகியவற்றின் தாக்கம், நாட்டின் பொருளாதாரத்தை பாதித்துள்ளது.

இந்நிலையில் அனைத்து மனித உரிமைகளும் மதிக்கப்படுவதையும் பாதுகாக்கப்படுவதையும் உறுதி செய்யுமாறு ஐ.நா. நிபுணர்கள் குழு அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. (நி)

# வரி மற்றும் எரிபொருள் விலை மேலும் அதிகரிக்கப்படும்

## நிதியமைச்சர் அலிசப்ரி



(கொழும்பு)

அடுத்த ஆறு மாதங்களுக்குள் இலங்கைக்கு சுமார் 3 பில்லியன் டொலர் வெளிநாட்டு உதவி தேவைப்படும் என நிதியமைச்சர் அலி சப்ரி வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

கடுமையான பொருளாதார நெருக்கடியை நிர்வகிப்பதற்கு எரிபொருள் மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக்கொள்ள இந்த நிதி அவசியம் எனத் தெரிவித்துள்ளார்.

எரிபொருளுக்காக இந்தியாவிடம் இருந்து மேலும் 500 மில்லியன் டொலர் கடனை இலங்கை நாடும் என்றும் இது சுமார் 5 வார தேவைகளுக்கு போதுமானதாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் சீனா, அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்டவர்களின் ஆதரவையும் அரசாங்கம் கோரும் என தெரிவித்த நிதியமைச்சர் அரசாங்க நிதியை சரிசெய்யும் முயற்சியில், நாடு அடுத்த ஆறு மாதங்களுக்குள் வரி விகிதங்களை உயர்த்தி எரிபொருள் விலையை மேலும் அதிகரிக்க வேண்டி ஏற்படும் என்றும் குறிப்பிட்டார். (நி)

# கோட்டாபயவுக்கு எச்சரிக்கை விடுத்த உலகின் பயங்கரமான ஹக்கர்கள் அணி

(கொழும்பு)

உலகில் மிகப் பயங்கரமான கணனி ஹக்கர்கள் அணி எனக் கூறப்படும் எனோனிமஸ் அணியினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதை காட்டும் காணொளி ஒன்று இணையத்தளத்தில் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி 14 நாட்களுக்குள் பதவியில் இருந்து விலக வேண்டும் எனவும் அதிகாரங்களை புதிய பாராளுமன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் அவர்கள் காணொளியில் தெரிவித்துள்ளனர்.

அப்படிச் செய்யவில்லை என்றால், ராஜபக்ஷ குடும்பத்தின் அனைத்து தகவல்களையும் வெளியிடப் போவதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர். எனோனிமஸ் என்ற இந்த அணியினர் உலகில் பிரபலமான தலைவர்கள் மறைத்து வைத்துள்ள சொத்துக்களை வெளியிட்ட அணியினர் என கருதப்படுகிறது.

பென்டோரா ஆவணங்கள், பனாமா ஆவணங்கள், விக்கிலீக்ஸ் என கடந்த காலங்களில் உலகில் அதிர்ச்சிகளை ஏற்படுத்தும் தகவல்களை இந்த அணியினரே வெளியிட்டுள்ளனர்.

இந்த அணியினர் ஏற்கனவே உக்ரைன் நாட்டுக்குள் நுழைந்த ரஷ்ய படையினரின் தகவல்கள், பெயர்கள், புகைப்படங்கள் ஆகியவற்றை வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)


உ
சிவமயம்









வட்டுக்கோட்டை
ஸ்ரீ மஹா கால வைரவர் சமேத மஹா ப்ரத்யங்கிரா தேவி சக்தி பீடம்
ஸ்ரீ சாமுண்டா பத்ரகாளி, ஸ்ரீ சரபேஸ்வரர், நாகராஜா, நாகராணி
ஆகிய மூர்த்தங்களுக்கான

பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

15.04.2022

எண்ணெய்க் காப்பு
பங்குனி மாதம் 30 ஆம் நாள்
13.04.2022
புதன்கிழமை காலை 9.00 மணி முதல்
14.04.2022 வியாழக்கிழமை பி.ப. 2.00 மணி வரை

கும்பாபிஷேகம்
சித்திரை மாதம் 02 ஆம் நாள்
15.04.2022
வெள்ளிக்கிழமை காலை 9.55 மணி முதல் காலை 10.30 மணிவரை

கிரியா கால விபரம்

| | | |
|---|---|---|
| 11.04.2022 திங்கட்கிழமை | காலை 9.30 மணி முதல் கணபதி ஹோமம், யந்திர பூஜை. | மாலை 4.30 மணி முதல் வாஸ்துசாந்தி, ஸ்தூபி, தீப, யந்திர, விம்பஸ்தாபனங்கள் இடம்பெறும். |
| 12.04.2022 செவ்வாய்க்கிழமை | காலை 9.30 மணி முதல் நவக்கிரக வழிபாடு | |
| 13.04.2022 புதன்கிழமை | காலை 9.00 மணி முதல் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு நடைபெறும். | மாலை 5.00 மணி முதல் மிருத் சங்கிரகணம், அங்குரார்ப்பணம், கும்பஸ்தாபனம், யாக மண்டபாராதனை என்பன இடம்பெறும். |
| 14.04.2022 வியாழக்கிழமை | காலை 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு நடைபெறும். காலை 9.00 மணி முதல் தேவி மஹாத்மிய பாராயணம், யாக மண்டபாராதனை, விசேஷ திரவிய ஹோமம். | மாலை 5.00 மணி முதல் விம்பசுத்தி, தத்வார்சனை, யாக மண்டபாராதனை. |
| 15.04.2022 வெள்ளிக்கிழமை | காலை 8.30 மணி முதல் யாக மண்டபாராதனை, மஹாபூர்ணாகுதி, சுபமுகூர்த்த வேளை ஆகிய காலை 9.55 மணி முதல் 10.30 மணி வரையுள்ள சுப வேளையில் மஹா கும்பாபிஷேகம், விஷேட பூஜாராதனை, அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வு இடம்பெறும். | |

கும்பாபிஷேகம் சிறக்க ஆசிகளையும் வாழ்த்துக்களையும் வழங்குபவர்கள்

"சாக்த ஸ்ரீ" ப்ரத்யங்கிரா ஸ்வாமிகள் (சோழிங்க நல்லூர், தமிழ்நாடு)

"சிற்ப கலைஞர்" பத்மநாபன் அவர்கள் (மாமல்லபுரம்)

சிவஸ்ரீ ராமசந்திரக் குருக்கள் பாபு சர்மா அவர்கள்

மேலும் பல சிவாச்சார்யார்கள் கலந்து கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ அன்னையின் அருள் பொலிந்துள்ளது. அடியவர்கள் வழிபாடுகளில் கலந்து பேரின்பம் பெற வேண்டுகிறோம்.

குறிப்பு : பக்த அடியார்கள் ஆலயத்திற்கு வரும் போது அபிஷேகத்திற்குரிய பால், தயிர், இளநீர், பூ, பூமாலை, கற்பூரம் என்பவற்றை கொண்டு வந்து பூஜைக்கு வழங்கலாம்.

[illegible]

எண்ணெய்க்காப்பு சாற்றும் மற்றும் வழிபாடுகளில் கலந்து கொள்ளும் அடியார்கள் கலாசார உடை அணிந்து வருமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இவ்வண்ணம்,
அன்னையின் தர்ம சேவையில் ஆலய நிர்வாகம்
077 645 1254

(10950)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி காட்டிய சுப்மான் கில்

# பஞ்சாப்பை வீழ்த்தியது குஜராத்



ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 16 ஆவது லீக் போட்டியில், குஜராத் டைடன்ஸ் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், குஜராத் டைடன்ஸ் அணியும் பஞ்சாப் கிங்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற குஜராத் டைடன்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 189 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, லிவிங்ஸ்டன் 64 ஓட்டங்களையும் ஷிகர் தவான் 35 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

குஜராத் டைடன்ஸ் அணியின் பந்துவீச்சில், ரஷித் கான் 3 விக்கெட்டுகளையும் தர்ஷன் நால்கன்டே 2 விக்கெட்டுகளையும் மொஹமட்ஷமி, ஹர்திக் பாண்ட்யா மற்றும் லொக்கி பெர்குசன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 190 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய குஜராத் டைடன்ஸ் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், அந்த அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சுப்மான் கில் 96 ஓட்டங்களையும் சாய் சுதர்சன் 35 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பஞ்சாப் கிங்ஸ் அணியின் பந்துவீச்சில், ரபாடா 2 விக்கெட்டுகளையும் ராகுல் சஹார் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 59 பந்துகளில் 1 சிக்ஸர் 11 பவுண்டரிகள் அடங்கலாக 96 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட சுப்மான் கில் தெரிவு செய்யப்பட்டார். (4-6)

## இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது குருநகர் பாடும்மீன்




யாழ் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் தலைவர் கிண்ண உதைபந்தாட்ட தொடரின் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற அரையிறுதிப்போட்டியில் பாடும்மீன் அணியை எதிர்த்து சென் மேரிஸ் அணி மோதியது.

தொடக்கம் முதல் விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் முதல் பாதி சமநிலையில் முடிவு பெற இரண்டாவது பாதி ஆட்டத்தில் பாடும்மீன்அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது.

பின்பு சுதாகரித்து ஆடிய சென்மேரிஸ் அணி பதிலுக்கு ஒரு கோலினை பெற ஆட்டம் பரபரப்பானது பின்பு இரண்டு அணியும் கோலினை போட முய ற்சித்தும் பலன் அளிக்க வில்லை ஆட்ட நேர முடிவில் 1-1 என் நிறைவு பெற வெற்றியை தீர்மா னிக்கும் சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

அதில் 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவு பெற்றது பாடும்மீன் விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டியில் நாவாந் துறை சென்றீக்கிலஸ் விளையாட்டு க்கழத்தினை எதிர் கொள்ள உள்ளது. (4-106)

## சாதனை படைத்த தவான்



பஞ்சாப் அணியின் ஆரம்ப ஆட்டக்காரராக விளையாடி வரும் இந்திய வீரர் ஷிகர் தவான் வரலாற்று சாதனை ஒன்றை படைத்துள்ளார்.

குஜராத் டைடன்ஸ் அணிக்கு எதிரான நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் ஷிகர் தவான் 30 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 35 ஓட்டங்கள் எடுத்தார். இதன் மூலம் இருபது-20 கிரிக்கெட்டில் 1000 பவுண்டரிகள் விளாசிய முதல் இந்திய வீரர் என்ற வரலாற்று சாதனையை படைத்துள்ளார்.

மேலும் ஐ.பி.எல் கிரிக்கெட் லீக்கில் இதுவரை 668 பவுண்டரிகளை தவான் விளாசியுள்ளார். உலக அளவில் 1000 பவுண்டரிகள் விளாசிய வீரர் என்ற சாதனையை படைத்திருக்கும் 5 ஆவது வீரர் தவான் ஆவார். இதற்கு முன்பு கிறிஸ் கெயில், அலெக்ஸ் ஹால்ஸ், டேவிட் வார்னர் மற்றும் ஆரோன் பின்ச் ஆகியோர் இந்த சாதனையை செய்துள்ளனர். (4-6)

### பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட்

## தென்னாபிரிக்கா முதல் நாள் முடிவில் 278-5

தென்னாபிரிக்கா மற்றும் பங்களாதேஷ் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான, இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல்நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இதன்படி முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் தென்னாபிரிக்கா அணி, நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில், 5 விக் கெட்டுகள் இழப்புக்கு 278 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

ஆட்டநேர முடிவில், கெய்ல் வெர்னைன் 10 ஓட்டங்களுடனும் வியான் முல்டர் ஓட்டமெதுவும் பெறாத் நிலையிலும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

போர்ட் எலிசெபத் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான இப்போட்டி யில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதல் இன்னிங்ஸிற்காக களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி, நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிவில், 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 278 ஓட்டங்களைப் பெற்றது.

இதன்போது டீன் எல்கர் 70 ஓட்டங்களுடனும் சரேல் எர்வீ 24 ஓட்டங்களுடனும் கீகன் பீட்டர்சன் 64 ஓட்டங்களுடனும் டெம்பா பவுமா 67 ஓட்டங்களுடனும் ரியான் ரிக்கல்டன் 42 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், தைஜுல் இஸ்லாம் 3 விக்கெட்டுகளையும் காலீல் அஹமட் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். 5 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில், போட்டியின் இரண்டாம்நாள் ஆட்டத்தை தென்னாபிரிக்கா அணி நேற்று ஆரம்பித்தது. (4-6)


### கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும் சித்த மருத்துவ அதிகாரியுமான (இலவச சித்த மருந்தகம், மல்லாகம், வலி.வடக்கு பிரதேச சபை) Dr. அ.சொரூபி அவர்களின் அன்புத் தந்தை



**அப்புத்துரை நடராசா**

மலர்வு 27.02.1936 உதிர்வு 05.04.2022

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். [illegible]

அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம், இலங்கை

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மறவன்புலத்தில் 25 பரப்புக் காணி விற்பனைக்கு (நிலப்பரப்பு)

- மறவன்புலம் மாவடி சந்திக்கு அருகாமை.
- இரண்டு பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் - பூநகரி பிரதான வீதியில் (A32) இலிருந்து 200m தூரத்தில்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 2½ Km தூரம் (A9)
- சகலகலாவல்லி வித்தியாலயம் அருகாமை
- நல்ல தண்ணீர் கிராமம் (மணல் மண்)
- அதிக குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி (நல்ல சூழல்)
- 16 அடி பாதையுடன்

ஒரு பரப்பின் விலை - [illegible] (300,000)

074 291 3725, 074 291 3726, 074 291 3727

(10987)

### வேலையாள் தேவை

மின்பொருள் விற்பனை நிலையத்திற்கு வேலையாள் தேவை. 25 வயதிற்கு மேற்பட்ட ஆண் விரும்பத்தக்கது.

(10986)

077 922 5648
075 590 4041


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை தாமதமின்றி பெறுங்கள்

## ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பினைப் பெறுவதற்குத் தேவையான மாற்றங்களை இலங்கை தாமதமின்றி செயற்படுத்த வேண்டும் என்று உறுப்பு நாடுகளின் கூட்டு அறிக்கையூடாக ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

அத்தோடு இலங்கை மக்களைப் பாதித்துள்ள தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஆக்கபூர்வமான மற்றும் ஜனநாயக வழிமுறைகளை ஆராயுமாறு அனைத்துத் தரப்பினருக்கும் தாம் அழைப்பு விடுப்பதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளாக ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து, ருமேனியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, நோர்வே, சுவிட்சர்லாந்து, மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பவற்றுடன் இணைந்து ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் நிலையான பாதைக்கு கொண்டு வருவதற்கு தேவையான சீர்திருத்தங்கள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன், உரிய அதிகாரிகள் தீர்க்கமான கலந்துரையாடல்களை ஆரம்பிக்க வேண்டிய நிலைமையின் தீவிரத்தன்மையை நாம் வலியுறுத்துகின்றோம் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)


# DPMC யின் பஜாஜ் வாகனங்களுக்கான வாகன வேலைத்தளம் மற்றும் பஜாஜ் அசல் உதிரி பாகங்கள் விற்பனை நிலையத்தின் கோலாகல திறப்பு விழா யாழ்ப்பாணத்தில்..!



இலங்கையின் மிகப்பெரிய மற்றும் முக்கிய நிதி ரீதியான ஸ்திரமான கூட்டு நிறுவனங்களில் ஒன்றாக திகழும் டேவிட் பீரிஸ் குழுமம் நாட்டின் பொருளாதாரத்தையும், நாட்டு மக்களின் நலனையும் கருத்திற்கொண்டு ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருகின்றது. நாடளாவிய ரீதியில் கிளைகளை அமைத்து அதன் சேவைகளை பல்வேறு பரிமாணங்களில் விஸ்தரித்து பல மைல்கற்களை கடந்துகொண்டிருக்கின்றது. அந்த வகையில் டேவிட் பீரிஸ் குழுமத்தின் அதன் பிரத்தியேகமான சேவைகளை தற்போது வடமாகாணத்திலும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

"வடமாகாண அபிவிருத்தி" எனும் கருப்பொருளைக்கொண்டு வடமாகாணத்தில் ஓர் அபிவிருத்தி முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற டேவிட் பீரிஸ் குழுமத்தின் நீண்ட நாள் முயற்சிக்கான முதற்கட்ட நடவடிக்கைகள் கடந்த வருடத்திலேயே ஆரம்பிக்கப்பட்டன. கடந்த காலங்களில் தொற்று நோய், கட்டுமானப்பொருட்களுக்கான தட்டுப்பாடு போன்ற அசாதாரண சூழ்நிலைகள் நாட்டில் நிலவியபோதிலும் கட்டுமானப்பணிகள் இடைநிறுத்தப்படாது தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன.

முழுமையாக நிறைவடைந்த கட்டுமானப்பணிகளைத் தொடர்ந்து 2022 மார்ச் 16 ஆம் திகதி பஜாஜ் முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், QUTE - குவாட்ரி சைக்கிள் மற்றும் KTM மோட்டார் சைக்கிள்களிற்கான சேவை மற்றும் பழுதுபார்ப்புகளை



மேற்கொள்ளும் வாகன வேலைத்தளம் மற்றும் பஜாஜ் அசல் உதிரி பாகங்கள் விற்பனை நிலையம் டேவிட் பீரிஸ் நிறுவனத்தின் தலைவர் திரு. டேவிட் பீரிஸ், திருமதி. பீரிஸ், திரு. ரோஹன திஸாநாயக்க, குழுமத்தின் தவிசாளர் மற்றும் நிர்வாக இயக்குநர் மற்றும் முழு குழுமத்தினதும் சிரேஷ்ட தலைமையியலாளர்கள் ஆகியோரின் முன்னிலையில் இல. 405, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கில் திறந்து வைக்கப்பட்டது. இப் பிரம்மாண்ட திறப்பு விழாவில் டேவிட் பீரிஸ் குழுமத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் தலைமை நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். மேலும் பல அதிதிகள், முக்கியஸ்தர்கள், வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் என அனைவரும் இதில் கலந்து சிறப்பித்தனர். வாகன லோகம், அசெட்லைன் லீசிங், டிபி லொஜிஸ்டிக்ஸ், டிபி க்ளோபல் வென்ச்சர்ஸ் மற்றும் டிபி இன்ஃபோடெக் போன்ற பல குழும நிறுவனங்கள் தங்களின் பல்வேறு வகையான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை இதன்போது காட்சிப்படுத்தின. இலை குழைகள் மற்றும் தோட்ட/பண்ணை கழிவுகளை பொடியாக்கும் ஸ்ரெடார் இயந்திரம் இங்கு விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இரசாயனப் பசளைகளுக்கு தட்டுப்பாடு நிகழும் இக் காலகட்டத்தில் இலகுவான முறையில் குறுகிய காலத்தில் இயற்கை உரம் தயாரிக்க உதவிடும் ஸ்ரெடார் இயந்திரம் விவசாயிகளுக்கும், வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுவோருக்கும் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

டேவிட் பீரிஸ் குழுமமானது வடமாகா



ணத்தில் அதன் அனைத்து குழு செயற்பாடுகளையும் அறிமுகப்படுத்தி அவற்றை பிரதேச ரீதியாகவும் விரிவுபடுத்தி வேலை வாய்ப்புகளையும் அதிகரித்து ஒட்டுமொத்த உள்ளூர் சமூகங்களின் வளர்ச்சியை கட்டியெழுப்ப உதவுகிறது என்பது யாவரும் அறிந்ததே. இதற்கு சிறந்த உதாரணம் பஜாஜ் வாகனலோக வாகன வேலைத்தளம் மற்றும் பஜாஜ் அசல் உதிரி பாகங்கள் விற்பனை நிலையமுமாகும்.

பஜாஜ் முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், QUTE - குவாட்ரி சைக்கிள் அல்லது KTM மோட்டார் சைக்கிளிற்கான சேவைகள், வாகனங்களை கழுவுதல், சுத்தப்படுத்தல் மற்றும் இதர சேவைகள், சிறு பழுதுபார்ப்பு வேலைகள், வாகன பரிசோதனைகள் மற்றும் மிக உயர் தரத்தில் மேற்கொள்ளப்படும் சேவைகள் என அனைத்தையும் இப்போது வடமாகணத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

பஜாஜ் வாகனத்திற்கான இது போன்ற சேவைகள் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும்போது ஏற்படும் செலவுகளை சமாளிப்பதற்கான சிறப்பு நிதியுதவியை அசெட்லைன் லீசிங் வழங்குகிறது.

அத்தோடு பதிவுசெய்யப்பட்ட வாகனத்தை தேர்ந்தெடுக்க முடிவதோடு, குத்தகை மற்றும் காப்பீடு என்பவற்றையும் தற்போது ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திறந்து வைக்கப்பட்டுள்ள புதிய வாகனவேலைத்தளம் மற்றும் குழுமத்தின் அலுவலகங்களுக்குச் சென்று



மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அனைத்து வாடிக்கையாளர்களையும் அன்போடு வரவேற்கின்றோம்.

(C-1678)


# இராசிபலன்

10.04.2022
பங்குனி 27 , ஞாயிற்றுக்கிழமை
நவமி பின்னிரவு 1.24 மணிவரை

பூசம் பின்னிரவு 5.08 மணிவரை
சுபநேரம் 9.06-10.36 மணிவரை
இராகுகாலம் 4.36-06.06 மணிவரை

ஸ்ரீராம நவமி,
குருத்தோலை ஞாயிறு
சந்திராஷ்டமம்: மூலம்

வளவன்




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சிந்தனை ஆற்றலினால் சிறப்படைவீர்கள், சுப செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.




எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம். தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள்.




புதிய முயற்சிகள் எளிதில் கைகூடும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், போசன சுகமுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.




நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும், வழிபாடு குதூகலம் தரும், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவான நிலை ஏற்படலாம், மனச் சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும்.




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.




தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, காரிய அனுகூலமுண்டு, கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.




வழிபாடு காரிய வெற்றி தரும், உன்னதமான வாழ்விற்கு அடித்தளம் அமைப்பீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.




வருங்கால நலன்கருதி புதிய திட்டங்களை தீட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும். குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், காரிய வெற்றிக்கு கண்ணனை வழிபட வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புக் கொள்ளப்பட்ட தவறு பாதி பரிகாரமாகும்.

# மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் விநியோகம்

## தனியார் பேருந்து உரிமையாளர்கள் குற்றச்சாட்டு

(கரணவாய்)

பருத்தித்துறை தனியார் பேருந்துகளுக்கு இ.போ.ச பருத்தித்துறை சாலையால் போதுமானளவு எரிபொருள் வழங்கப்படுவதில்லை என தனியார் பேருந்து உரிமையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

பருத்தித்துறை தனியாருக்கான எரிபொருளை இ.போ.ச. பருத்தித்துறைசாலையில் பெற்றுக் கொள்ளுமாறு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் பருத்தித்துறைசாலை முகாமையாளரால் அவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்படுகிறது.

பருத்தித்துறையிலிருந்து 6 பிரிவுகளில் தினமும் 27 பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன.

எனவே எரிபொருளை மட்டுப்படுத்துவது தொடர்பாக அதிகாரிகள் கவனமெடுக்குமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக பருத்தித்துறை சாலை முகாமையாளர் ஜீவானந்தம் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலாளருடனும் தானும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் உறுப்பினர்களும் கலந்துரையாடிய பின்னர் தீர்மானம் எடுக்கவுள்ளதாக தெரிவித்தார். (4-60)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன் எழுதிய "அக்கினிச் சிறகாய்" நூல் வெளியீட்டு விழாவானது இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு வாலை அம்மன் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெறும்.

மாகாண கல்வித் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் தெ.கிரிதரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு யாழ்.பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

இவ்வெளியீட்டு விழாவின் வெளியீட்டுரையை எழுத்தாளர் பெ.ஸ்ரீகந்தநேசனும் ஆய்வுரையை யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலனும் ஏற்புரையை நூலாசிரியரும் வழங்கவுள்ளனர். (4)

## மருத்துவமனை மின்பிறப்பாக்கியை சீராக்கும் பணி முன்னெடுப்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நான்கு வருட காலமாக எந்தவிதமான பராமரிப்பும் இன்றிக் காணப்பட்ட மின்பிறப்பாக்கியை (ஜெனரேட்டர்) பராமரிப்பதற்குரிய ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மருத்துவமனை நிர்வாகம் முன்னெடுத்துள்ளது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை மின்வெட்டு நேரத்தில் இருளில் மூழ்குவதாகவும், மின்பிறப்பாக்கி ஒன்று பராமரிப்பு இன்றி கைவிடப்பட்டிருப்பதாகவும் பத்திரிகைகளில் வெளியான செய்திகளைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இது தொடர்பாக கடந்த வாரம் விஜயம் மேற்கொண்டு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் பேசி மின்பிறப்பாக்கியை பாதுகாப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுத்திருந்த நிலையில் மின்பிறப்பாக்கிக்கு பாதுகாப்புக் கொட்டகை இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)

## மருத்துவமனைக்கு உயிர் கொடுத்த பட்டா ரக வாகனம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் உள்ள மின்பிறப்பாக்கியின் பற்றறி செயலிழந்ததால் வீதியால் சென்ற பட்டா வாகனம் ஒன்றை மறித்து அதன் பற்றறி உதவியுடன் ஜெனரேட்டர் இயங்க வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் மின்பிறப்பாக்கி அடிக்கடி பழுதடைந்து சிரமத்தை ஏற்படுத்தி வரும் நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவும் மின்வெட்டு நேரத்தில் மின்பிறப்பாக்கியின் பற்றறி செயலிழந்து இயங்க முடியாத நிலை காணப்பட்டது.

இதனால் மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் பிரதேச இளைஞர்கள் வீதியால் சென்ற பட்டா வாகனம் ஒன்றை மறித்து அதன் பற்றறி உதவியுடன் மின்பிறப்பாக்கியை இயங்க வைத்தனர்.

நாட்டில் தற்போது தொடர்ச்சியாக மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்ற போதிலும் சாவகச்சேரி மருத்துவமனை நிர்வாகம் மின்பிறப்பாக்கியில் உள்ள குறைபாடுகளை சீர் செய்யாது பராமரிப்பு இன்றி வைத்திருப்பதாக பொதுமக்கள் பலரும் குற்றஞ்சாட்டி வருகின்றனர். (4-6-30)

## சிறுவர் பூங்கா திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு சிறுவர் பூங்காவின் திறப்பு விழாவானது இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் அருகாமையிலுள்ள பண்டத்தரிப்பு சிறுவர் பூங்காவில் நடைபெறும்

இந் நிகழ்வு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தலைமையில் நடைபெறும்.(4-6)

## போக்குவரத்திற்கு இடையூறு ஒருவர் கைது

(கரணவாய்)

நெல்லியடியாழ்ப்பாணம் பிரதான வீதியில் மது போதையில் வீதியில் படுத்திருந்த ஒருவரை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் கரவெட்டி பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிய வந்துள்ளது.

குறித்த நபர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் பருத்தித்துறை, மந்திகை வீதிகளில் படுத்து பின்னர் யாழ்ப்பாணம் நெல்லியடி திருமகள் சோதி வீதியில் படுத்துள்ளார்.

குறித்த நபரை நெல்லியடி பொலிஸார் கைது செய்து மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய போது, குறித்த நபர் மது போதையில் இருப்பது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் குறித்த நபரை நெல்லியடி பொலிஸார் கைது செய்தனர். (4-6-60)

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணம்பாய் அருள்மிகு கண்ணகியம்மன் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணிக்கு இடம்பெறும். அத்துடன் மாலை 3 மணிக்கு தேர்த் திருவிழா உற்சவமும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (4)



இணுவில் பொதுநூலக ஆண்டு விழாவை முன்னிட்டு இரத்ததான முகாம் நிகழ்வு நேற்று சனிக்கிழமை மேற்படி பொதுநூலக மண்டபத்தில் இணுவில் பொதுநூலக நிர்வாக சபைத் தலைவர் ந.ஸ்ரீ அரவிந்தன் தலைமையில் இடம்பெற்றது. (படம்:-ரவிசாந்)

## கண்காட்சி

(குப்பிழான்)

தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்குட்பட்ட தொழில் முயற்சியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் சமுர்த்தி அபிமானி விற்பனைக் கண்காட்சி நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

இந்தக் கண்காட்சியில் அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மேற்படி நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-6-18)

## சுபகிருது வருடப்பிறப்பு சிறப்பு வழிபாடு

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலின் சுபகிருது வருடப்பிறப்பு சிறப்பு உற்சவ பூஜைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணி முதல் நடைபெறவுள்ளது என ஆலய தர்ம பரிபாலன சபை அறிவித்துள்ளது. (4)

## அரசிற்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவு வழங்க தயார்

## முன்னணி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கோட்டாபய ராஜபக்சவை வீட்டுக்கு அனுப்புவதற்காக ஐக்கிய மக்கள் சக்தியினரால் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கையெழுத்து பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தமது முழுமையான ஆதரவினை வழங்கத் தயார் என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

கோட்டா அரசாங்கத்துக்கு எதிரான அனைத்து செயற்பாடுகளுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்குவார்கள் எனவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார். (4-6-33)

## ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொற்பதி அறிவாலய 10 ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பொற்பதி அறிவாலயத்தில் நடைபெறும்.

இதன்போது புதிய கலாசார மண்டப திறப்பு விழாவும் இடம் பெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக [illegible] அங்கஜன் இராமநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (4)

## இரத்ததான முகாம்



(குப்பிழான்)

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டம் நற்பணிமன்றம் ஆரம்பமாகி இரண்டாவது வருட நிறைவை முன்னிட்டு மேற்படி நற்பணிமன்றத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை கொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த இரத்ததான முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இரத்ததான முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-6-18)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய மருந்துகளுக்குப் பாரிய தட்டுப்பாடு!

(கொழும்பு)

**நாட்டில் தற்போது நிலவும் மருந்துகள் மற்றும் சுகாதார உபகரணங்களின் கடுமையான தட்டுப்பாடு மருத்துவமனை நடவடிக்கைகளில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.**

மருந்துப் பற்றாக்குறையினால் ஏற்படும் பாரதூரமான சுகாதார அபாயங்களை நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சுகாதார செயலாளருக்கு அறிவிக்க அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மூன்று உயிர்காக்கும் மருந்துகளுக்கும் 140 அத்தியாவசிய மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக மருந்துப் பொருட்கள் ஒழுங்குமுறை மற்றும் வழங்கல் இராஜாங்க அமைச்சின் செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மாரடைப்பு, உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களுக்கான மருந்துகளுக்கு பாரிய பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதுடன் ஐ.சீ குழாய்கள் மற்றும் இண்டர்கோஸ்டல் குழாய் மற்றும் சிறுநீர்க்குழாய் பற்றாக்குறையும் உள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

# இலங்கை விடயத்தில்
## பின்வாங்கிய சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்குவது தொடர்பில் ஆராய சர்வதேச நாணய நிதியம் நாளை வோஷிங்டனில் நடத்தவிருந்த கூட்டம் காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனை மத்திய வங்கியின் புதிய ஆளுனர் நந்தலால் வீரசிங்கவிடம் சர்வதேச நாணய நிதியம் நேற்று அறிவித்துள்ளதாக தெரியவருகிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியே இதற்கான காரணமெனவும், இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள நிதியமைச்சர் அலி சப்ரியும் அமெரிக்கா செல்ல விருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# நெருக்கடியில் அச்சுத்துறை
# கொழும்பில் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியால் அச்சுத்துறையும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

அச்சுப் பதிப்பிற்கான கடதாசிகள் பற்றாக்குறை மற்றும் விலையேற்றம் ஆகியவற்றைக் கண்டித்து கொழும்பு, காலி முகத்திடலுக்கு முன்பாக நேற்று சனிக்கிழமை காலை அமைதியான முறையில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அச்சுத்துறையில் ஈடுபட்டுள்ள தொழில் அதிபர்கள், வர்த்தகர்கள் மற்றும் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டு தங்களது எதிர்ப்பை வெளிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அவுஸ்திரேலியாவிடம் இருந்து இலங்கைக்கு 2.5 மில்லியன் டொலர்

(கொழும்பு)

இலங்கையில் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்த 2.5 மில்லியன் அவுஸ் திரேலிய டொலர்களை வழங்க அவுஸ்திரேலிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவுஸ்திரேலிய அரசாங்கம், ஐ.நாவின் உலக உணவுத் திட்டம், உணவு மற்றும் விவசாய அமைப்பு ஆகியவற்றின் ஊடாக இந்த நிதி வழங்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளது. (நி)


**மணமகள் தேவை**

47 வயதுடைய விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:
077 263 0431



**பெயர் மாற்றம்**

இலகடி புற்றளை புலோலி கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட மகேந்திரராஜா பாலவரதன் ஆகிய எனது பெயரை மகேந்திரராஜா சரவணபவன் என மாற்றம் செய்து இன்றிலிருந்து அப்பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள:
மகேந்திரராஜா சரவணபவன்


# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி கோரி
## நீர்கொழும்பில் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என்றும் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்கு உரிய நடவடிக்கை எடுக்க முடியாமல் போன இந்த அரசாங்கம் பதவி விலக வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து நேற்று நீர்கொழும்பில் கத்தோலிக்க மக்கள் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தினர். (நி)

# மருந்துப்பொருட்களின் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

வர்த்தமானியில் அறிவிக்கப்படாத மருந்துப் பொருட்களுக்கு உடன் அமுலாகும் வகையில் 20 சதவீதம் விலை அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது.

தேசிய ஒளடத ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையினால் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக குறித்த அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி)


**மணமகள் தேவை**

1986 ஜேர்மனியில் வசிக்கும் வைத்தியருக்கு படித்த மணமகள் தேவை.

1985 ஜேர்மனியில் வசிக்கும் பேச இயலாத மணமகனுக்கு மணமகள் தேவை. (சீதனம் தேவையில்லை)

தொடர்புகளுக்கு:
076 733 8071
076 475 2219
viber
0094762049298
0094764752219
ஜேர்மனி/ whats app
004917643399372


# நம்பிக்கையில்லா பிரேரணை
## கொண்டுவரப்பட்டால் ஆதரவளிப்போம்
### கூட்டமைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டால் அதற்கு ஆதரவளிக்க தயார் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் ஸ்திரமான அரசாங்கம் இல்லாமல் சர்வதேச நாணய நிதியம் போன்ற பொதுக் கட்டமைப்புக்களுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தமுடியாது என எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

ஆகவே வெகுவிரைவில் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)


**வகுப்பு**

புதிய ஆண்டுக்கான 2ம் மொழி சிங்கள வகுப்புக்கள் ஆரம்பம் 15.04.2022

தரம்-06, 07, 08, 09

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான வாய்மொழி மூல சிங்கள வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

இடம்- நீராவியடி, யாழ்ப்பாணம்
(இலங்கை வேந்தன் திருமண மண்டபத்திற்கு அருகில்)
தொடர்பு:
077 990 6867
077 214 0220


# இடைக்கால அரசாங்கத்தின் பிரமதர் பதவி
## ரணில் ,பொன்சேகா உள்ளிட்ட ஐவரின் பெயர் பரிந்துரை

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சியினரால் முன் மொழியப்பட்டுள்ள இடைக்கால அரசாங்கத்தின் பிரதமர் பதவிக்கு ஐந்து பேரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. ரணில் விக்ரமசிங்க, நிமல் சிறிபால டி சில்வா, பாட்டலி சம்பிக்க ரணவக்க, பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா மற்றும் ... ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். (நி)


**ஜெயக்குமார் திருமண சேவை**

1991 சூரி செவ் லண்டனில் வசிக்கும் டிகிரி முடித்த மணமகளுக்கு மணமகன் தேவை (சீதனம் உண்டு) 1987 கனடா, 1990 லண்டன், 1995 கனடா, 1990 கனடாவில் வசிக்கும் மணமகளுக்கு படித்த மணமகன் தேவை.

1982 ல் இருந்து 1995 வரை பிறந்த வெளிநாட்டில் வசிக்கும் மணமகன்களுக்கு மணமகள் தேவை. இலங்கையில் உள்ள மணமகன் மணமகள்களுக்கும் பொருத்தமான வரன்கள் உண்டு.

தொடர்புகளுக்கு:
076 733 8071
076 475 2219
viber-}
0094762049298
0094764752219
ஜேர்மனி whatsapp: 004917643399372


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோதுமை மா விலை அதிகரிப்பு உணவக உரிமையாளர்கள் பாதிப்பு

(தருமபுரம்)



கோதுமை மாவின் விலை அதிகரிப்பை அடுத்து கோதுமை மா உணவுப் பொருட்கள் விற்பனை செய்வதில் பல சிரமங்களை எதிர் நோக்குவதாக உணவக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கோதுமை மாவின் விலை 50 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது இதன் காரணமாக வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் நாளாந்தம் உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இனி வரும் நாட்களில் உணவகங்கள் முற்று முழுதாகமூடும் நிலை ஏற்படும். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.(4-6-316)



முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்நோக்கு அபிவிருத்தி செயலணியினால் பல்வேறு அரச சேவை நிறுவனங்களில் வெற்றிடமாக உள்ள ஆரம்ப தரத்தின் பதவிகளுக்கு பல்நோக்கு அபிவிருத்தி செயலணியின் பயிற்சியினை பூர்த்தி செய்த பயிற்சியாளர்களை இணைத்துக்கொள்வதற்கான நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வு மாவட்ட உதவிப் பணிப்பாளர் கப்டன் ஐ.சசிக்குமார் தலைமையில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்றது. (படம்-தவசீலன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 260 | 250 | 240 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 185 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 400 | 350 |
| தக்காளி | 100 | 120 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 150 | 120 | 100 |
| கோவா | 100 | 100 | 100 | 100 |
| கரட் | 140 | 180 | 200 | 220 |
| பூசணி | 60 | 80 | 60 | 100 |
| புடோல் | 160 | 100 | 120 | 140 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 240 | 280 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 220 | 200 | 250 |
| பாகற்காய் | 350 | 380 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 200 | 160 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 240 | 120 | 160 |
| பயற்றங்காய் | 400 | 350 | 200 | 200 |
| லீக்ஸ் | 150 | 140 | 150 | 200 |
| பீற்றூட் | 160 | 160 | 130 | 180 |
| கறிமிளகாய் | 200 | 180 | 180 | 300 |
| முருங்கைக்காய் | 1100 | 1200 | 800 | 1200 |
| போஞ்சி | 250 | 320 | 240 | 250 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | — | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 160 | 250 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 70-90 |
| இராசவள்ளி | 200 | 150 | 180 | 200 |
| வெங்காயப்பூ | — | 200 | — | 160 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 150 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 80 | 150 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | — | — | — | — |

SriLankan Airlines oneworld

## அதிகாரப்பூர்வ உரிமையாண்மைப் பங்காளர்களுக்கான அழைப்பு

இலங்கை விமானக் கல்லூரியானது, (SLAC) விமான தொழிற்துறைக்கும், கூட்டு நிறுவனங்களுக்கும் பல்வேறு பயிற்சித் தீர்வுகளை வழங்கி வரும் இலங்கை விமான நிலையத்தின் பயிற்சிப் பிரிவாகும். ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் சிறந்த செயற்திறன் மிக்க, அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையங்களில் (ATC) ஒன்றாக நாம் சர்வதேச விமானப் போக்குவரத்துக் கழகத்தினரால் (IATA) அங்கீகரிக்கப்பட்டுள்ளோம்.

இலங்கை விமானக் கல்லூரியானது, (SLAC) வடகிழக்கு மாகாணங்களில் அதிகாரப்பூர்வ உரிமையாண்மைப் பங்காளர்களுக்கான கிளைகளைத் திறப்பதன் மூலம் இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதன் நடவடிக்கைகளை விரிவுபடுத்தி, மாணவர்களுக்கு விமான மற்றும் கூட்டுநிறுவனத் துறைகளில் வேலைவாய்ப்பை பெறுவதற்குத் தேவையான தகைமைகளை வளர்த்துக்கொள்வதற்கான வாய்ப்பை வழங்க திட்டமிட்டுள்ளது.

**அதிகாரப்பூர்வ உரிமையாண்மைப் பங்காளர்களுக்கான பொறுப்புக்கள்:**

- பயிற்சி வசதியை வழங்குதல் மற்றும் பயிற்சித் தரத்தினை பராமரித்தல்
- பயிற்சி மையத்தின் செயற்பாடுகள் மற்றும் நிர்வாகத்தைப் பேணுதல்
- SLAC பயிற்சித் திட்டங்களுக்கான சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- SLAC உடன் இணைந்து விமான போக்குவரத்து தொடர்பான CSR திட்டங்களை முன்னெடுத்தல்

எமது உரிமையாண்மைக் கிளைகளுக்கான பங்காளர்கள் எதிர்பார்க்கப்படுகின்ற மாகாணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- வட மாகாணம் கிழக்கு மாகாணம்

**தேர்ந்தெடுக்கப்படுவதற்கான அளவுகோல்:**

தெரிவுசெய்யப்பட்ட அதிகாரப்பூர்வ உரிமையாண்மைப் பங்காளர் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

- நிலையாக நிறுவப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அமைப்பாக இருத்தல் அவசியம். சுற்றுலா மற்றும் பயணம், விமானப் போக்குவரத்து, சரக்கு பகிர்வு, கப்பல் சரக்கு, விருந்தோம்பல் அல்லது கல்வி ஆகியவற்றில் காணப்படும் அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- மேற்குறிப்பிடப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களில் பின்வருவனவற்றை வழங்க வேண்டும்.
  - குறைந்தபட்சம் 2 வகுப்பறைகளை கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் 20 மாணவர்கள் வரை அனுமதிக்கக்கூடிய இடவசதிகளுடன் கணினிகள் மற்றும் மல்டிமீடியா வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
  - SLAC வழிகாட்டுதல்களின் கீழ் போதுமான ஊக்குவிப்பு மற்றும் நிர்வாக ஆதரவுகளை வழங்க வேண்டும்.

ஒவ்வொரு பகுதிக்கும் சந்தைப்படுத்தல், வணிக மேம்பாடுகள், தயாரிப்பு மேம்பாடுகள் மற்றும் செயற்பாட்டு உட்கட்டமைப்பு என்பவற்றுடன் முகாமைத்துவத் திறன் உள்ளிட்ட அம்சங்களை உள்ளடக்கிய ஒரு தனி வணிகத் திட்டங்களுடன் இலங்கை விமானக் கல்லூரிக்கு உங்கள் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆர்வமுள்ள தரப்பினர்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி வணிகத் திட்டங்களுடன் பல உரிமையாளர்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.

வணிகத் திட்டத்திற்கு மேலதிகமாக, கடந்த மூன்று ஆண்டுகளின் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளுடன், வணிகப் பதிவு, வணிகத்தின் தன்மை, பணிப்பாளர் குழு ஆகியவற்றைக் கொண்ட அதிகாரப்பூர்வ உரிமையாண்மையினை முழுமையாக உள்ளடக்கிய நிறுவனத்தின் சுயவிவரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் முடிவுறும் திகதி:**
2022 மே 31

**உங்கள் பிரேரனைகளுக்கான அஞ்சல் அல்லது மின்னஞ்சல் முகவரி:**

சந்தைப்படுத்தல் மற்றும் வணிக மேம்பாட்டு முகாமையாளர்
இலங்கை விமானக் கல்லூரி
இலங்கை விமான நிலையம், விம்ான மையம்,
பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கா, இலங்கை.

தொலைபேசி: 019 733 2567 / 071 021 2567
மின்னஞ்சல்: training@srilankan.com
இணையத்தளம்: www.srilankanaviationcollege.com

(சி-1679)

# இடர்கால நிவாரண உதவி முதற்கட்டமாக வழங்கி வைப்பு

(மன்னார்)



மன்னார் மாவட்டத்தில் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட நூறு குடும்பங்களுக்கு இடர் கால நிவாரணம் நேற்று சனிக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக வடக்கில் பல நூற்றுக்கணக்கான பின்தங்கிய குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடக்கில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களிலும் முதற்கட்டமாக 1200 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு இடர் கால நிவாரண உதவியாக சுமார் 3500 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப்பொருட்களை வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (4-6-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவத்தால் நீண்ட உயர் மரங்களேனும்
பருவத்தாலன்றிப் பழா.

– ஔவையார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாற்றத்தை விரும்பும் சிறப்பு சிங்கள மக்களிடம் உண்டு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்கு எதிராக சிங்கள மக்கள் தொடர்ச்சியாக நடத்துகின்ற போராட்டம் கண்டு உண்மையிலேயே வியந்து போனோம்.

இதை நாம் கூறும்போது, கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியைக் கொண்டு வந்தவர்கள் யார்? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறானதொரு கேள்வி எழும்போது அதற்கான பதிலையும் நாம் கூறித்தானாக வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியைக் கொண்டு வந்தவர்கள் சிங்கள மக்கள் என்பதில் மாற்றுக்கருத்திற்கிடமில்லை.

ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ தரப்பை ஆட்சியில் இருத்துவதற்குக் காரணம் சிங்கள மக்கள் என்பதற்காக, அவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்ப்பு வழங்கிவிட முடியாது.

ஆம், ஜனாதிபதித் தேர்தல் ஒன்றில் மகிந்த ராஜபக்ஷவை தோற்கடித்து மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கிய வரலாறு உண்டு.

சிங்கள மக்களின் வாக்குகளுடன் தமிழ் மக்களின் வாக்குகளும் சேர்ந்து மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கியது.

அதேநேரம் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராகக் கொண்ட பாராளுமன்ற ஆட்சியும் அமைந்தது.

ஆனால் அந்த மாற்றம் சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் ஏமாற்றியதைத் தவிர வேறு எதனையும் சாதிக்கவில்லை.

மாறாக, ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் ரணிலும் மோதிக் கொண்டனர். இருவரும் ஒருவருக்கொருவர் விசுவாசமின்றிச் செயற்பட்டனர்.

மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கி மிகப் பெரியதொரு அரசியல் கோமாளித்தனமும் நடந்தது.

இந்தநிலையில் ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாஸவும் கடும் பகை கொண்டனர். ரணில் விக்கிரமசிங்க சஜித் பிரேமதாஸவை ஓரங்கட்டினார்.

ஈற்றில் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை நிறுத்திய ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி சஜித்தின் வெற்றிக்காகப் பாடுபடவில்லை.

அதேநேரம் சஜித் பிரேமதாஸவை எதிர்த்து களமிறங்கிய கோட்டாபய ராஜபக்ஷ கடும் பிரசாரம் செய்தார்.

சிங்கள மக்களின் மீட்பராகத் தன்னை இனங்காட்டிக் கொண்டார்.

அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கினர். இதுவே நடந்த உண்மை.

ஆனால் சிங்கள மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடந்து கொள்ளவில்லை. குடும்ப ஆட்சி கோலோச்சியது. நாடு கந்தறுந்தது.

இந்த ஆபத்தான சூழ்நிலையில் ஆட்சியாளர்களை அகற்ற வேண்டும். நாம் வாக்களித்தோம் என்பதற்காக அவர்களைத் தொடர்ந்து ஆட்சியில் வைத்திருக்க முடியாது என்று தீர்மானித்த சிங்கள மக்கள் உடனடியாகவே அரசுக்கு எதிரான போராட்டத்தில் களமிறங்கினர்.

அந்தப் போராட்டத்தில் இருந்து சிங்கள மக்கள் இம்மியும் விலகவில்லை எனும் போது பொருத்தமற்ற ஆட்சித் தரப்பையும் பொருத்தமற்ற கொள்கைகளையும் அப்புறப்படுத்தி நேரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் சிங்கள மக்கள் உறுதியாக உள்ளனர். இஃது அவர்களிடம் இருக்கக்கூடிய மிகப்பெரும் சிறப்பாகும்.

ஆனால் நாம் பொருத்தமற்றவர்களைப் பாராளுமன்றம் அனுப்பிவிட்டு, அவர்களை இன்னும் புரிந்து கொள்ளாமல் இருக்கிறோமே அதுதான் தமிழராகிய எங்களின் மிகப்பெரும் பலவீனம்.

# நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதால் நெருக்கடிக்கு தீர்வு காணமுடியாது

## ஆளும் தரப்பு எம்.பி திஸாநாயக்க

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமையை நீக்குவதன் மூலம் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது என எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள் படும் இன்னல்களுக்கு அரசாங்கம் என்ற ரீதியில் வருந்துவதாக கூறிய அவர், மக்களின் குறைகளை உணர்ந்து அரசாங்கம் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மை தொடர்பாக எவ்வித பிரச்சினையும் ஏற்படவில்லை என்றும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## யாழிலிருந்து திருமலைக்கு சுற்றுலா சென்ற வாகனம் விபத்தில் சிக்கியதில்

### ஒருவர் பலி; இருவர் படுகாயம்

(திருகோணமலை)

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்குச் சுற்றுலா சென்ற வான் கனரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இருவர் படுகாயம் அடைந்த நிலையில் திருகோணமலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் திருமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் கிளபென்பேர்க் பகுதியில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

திருகோணமலையிலிருந்து கிண்ணியா நோக்கிப் பயணித்த கனரக வாகனமும் கிண்ணியா பிரதேசத்திலிருந்து திருகோணமலை நோக்கி சென்றுகொண்டிருந்த வாகனமுமே விபத்துக்குள்ளாகியுள்ளன.

இவ்விபத்தில் யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த ரத்னகலாவதி (72வயது) என்பவரே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்குச் சுற்றுலா சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒன்பது பேரில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் படுகாயம் அடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## ஆனைக்கோட்டையில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் மரணம்

ஆனைக்கோட்டையில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனைக்கோட்டை முதலாம் வீதியைச் சேர்ந்த திருச்செல்வம் நியூட்டன் (வயது-33) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

நேற்று காலை 10 மணியளவில் அவரது மனைவி அவரின் அறையை திறந்து பார்த்தபோதே அவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டார்.

இதனையடுத்து மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனைகளுக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## பெரிய மாற்றத்துடன் புதிய தொடக்கம் தேவை

### கொழும்பு பேராயர் கர்தினால்

(கொழும்பு)

நாட்டிற்கு பெரிய மாற்றத்துடன் புதிய தொடக்கம் தேவை என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.


நீர்கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே கர்தினால் இதனைத் தெரிவித்துள்ளார்.

இப்போது பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் சேர்ந்து நாடகம் ஆடுவதைப் பார்க்கிறோம்.

இந்த நிலை தொடர அனுமதிக்க முடியாது. இந்த அமைப்பை மாற்ற இந்த நாட்டின் அனைத்து குடிமக்களும் ஒன்றிணைய வேண்டும்என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் என்றார். (ம-7)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்

### மனிதனை இறைவன் சந்திப்பது எப்படி?



உலகில் மனிதனாக இயேசு வாழ்ந்த காலகட்டங்களில், மனிதர்களை அவர் சந்தித்ததை 3 விதமாகப் பிரிக்கலாம். முதலாவது. அவர் தேடிச்சென்று சந்தித்த மனிதர்கள். 2ஆவது. அவரை நாடிவந்த மனிதர்கள். 3 ஆவது. அவரிடம் கொண்டு வரப்பட்ட மனிதர்கள்.

38 ஆண்டுகள் நோயினால் வாடிய ஒருவன், வெளியே எங்கும் செல்ல முடியாமல் பெதஸ்தா குளத்தின் அருகே படுத்துக் கிடந்தான். அந்தக் குளத்துக்கு வந்த இயேசு அவனை சந்தித்து குணப்படுத்தினார் (யோவான்5:1-9). இவன் இயேசுவால் சந்திக்கப்பட்ட மனிதன்.

12 ஆண்டுகள் பெருத்த வியாதியில் இருந்த பெண் ஒருத்தி. இயேசு போகும்போது பின்னால் சென்று அவரது ஆடையைத் தொட்டு குணமானாள் (மாற்கு5:25-29). இவள் மட்டுமல்ல இன்னும் எத்தனையோ பேர் இயேசுவை நாடிவந்து அதிசயமாக குணம் பெற்றுச் சென்று இருக்கிறார்கள். இவர்கள் 2 ஆம் விதத்தில் இயேசுவை சந்தித்தவர்கள்.

3 ஆவதாக, பக்கவாதத்தால் (திமிர்வாதம்) பாதிக்கப்பட்ட மனிதன், மற்ற சிலரால் தூக்கி இயேசுவிடம் கொண்டு வரப்பட்டான் (மத்.9:2). இவனுக்கும் சுகம் கிடைத்தது.

ஆக, 3 விதமான வழிகளில் இறைவனுக்கும் மனிதனுக்கும் சந்திப்பு ஏற்படுகிறது. நம்மை நல்வழிப்படுத்துவதற்கோ அல்லது இறை பணிக்கோ அழைக்கும்போது, இதுபோன்றே ஏதாவது ஒரு வகையில் இறைவன் நம்மை சந்திக்கிறார். நல்வழிக்கு செல்லவும், இறை பணியைச் செய்யவும் இறைவனால் சந்திக்கப்பட்ட மனிதன் பவுல் (அப்.9:5). பல சீடர்களையும் இயேசுவே நேரில் சென்று தன்னை பின்பற்றுவதற்காக அழைத்தார். இப்படி இறைவனாலே சந்திக்கப்பட்டு, இறை பணியில் உள்ள மனிதர்களால் பெரிய காரியங்கள் நடந்துள்ளன.

இறைவனை நாடிச் செல்வதன் மூலம், அவ்ரை அடையக்கூடிய நிலை பற்றி இயேசு (மத்.11:12), (லூக்.16:16) கூறுகிறார். ஒரு தீர்மானம் எடுத்து, அதன்படி தினமும் விடாப்பிடியாக மன்றாடி ஜெபித்து, அவரது வார்த்தைகளுக்கு [illegible] வர்களை இறைவன் ஏற்றுக் கொள்கிறார். பாவமற்ற வழியில் நடப்பதற்கு [illegible] (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## பத்தில் வந்தது குருபகவான்; பதவியில் மாற்றம் உருவாகும்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**வெற்றிக்கான நேரம் அறிந்து காரியங்களைச் செய்யும் மிதுன இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான், 13.4.2022 முதல் 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்திற்கு வருகிறார்.

சுமார் ஓராண்டு காலம் அங்கு வீற்றிருந்து அதன் பார்வை பலனால் உங்களுக்கு நன்மைகளை வழங்குவார். '10 இல் குரு வந்தால் பதவியில் மாற்றம் வரும்' என்பார்கள்.

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

நவக்கிரகங்களில் சுபக்கிரகமாக விளங்கும் குரு, உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்திற்கு அதிபதியாவார். அவர் தன் சொந்த வீட்டில் 10 ஆம் இடத்திலேயே சஞ்சரிப்பது யோகம் தான்.

எனவே எந்த மாற்றம் வந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளும் பக்குவமும் உங்களிடம் இருக்கும். 10 இல் குரு வரும் பொழுது ஜீவன ஸ்தானம் பலப்படுகிறது.

எனவே தொழில், வியாபாரத்தில் புதிய திருப்பங்கள் ஏற்படும். பணியாளர்களின் ஒத்துழைப்புக் குறைந்தாலும் தட்டிக் கொடுத்து வேலை வாங்கும் தன்மை உங்களிடம் உண்டு. கூட்டுத் தொழில் புரிவோர் கூட்டாளிகளிடம் நம்பிக்கை வைப்பதை விட, தாங்களே முழுமையாக தொழிலில் கவனம் செலுத்துவது நல்லது.

**குருவின் பார்வை பலன்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவான் உங்கள் இராசிக்கு 2, 4, 6 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். குருவின் பார்வை 2 ஆம் இடத்தில் பதிவதால் குடும்ப ஸ்தானம் பலப்படுகிறது. குடும்ப முன்னேற்றம் கூடும்.

ஒற்றுமை பலப்படும். இது வரை குடும்பத்தில் கொடிகட்டிப் பறந்த பிரச்சினைகள் படிப்படியாக மாறும். சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். பணப் புழக்கம் நன்றாக இருக்கும்.

குருவின் பார்வை 4 ஆம் இடத்தில் பதிவதால் சுகஸ்தானம் புனிதமடைகிறது. எனவே சந்தோஷ வாய்ப்புகள் வந்து சேரும். மாற்று மருத்துவத்தால் ஆரோக்கியத் தொல்லை அகலும். தாயின் உடல்நலம் சீராகும்.

தாய்வழி உறவினர்களால் நன்மை கிடைக்கும். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த காரியங்கள் நடந்தேறும்.

6 ஆம் இடத்தை குரு பார்ப்பதால், எதிர்ப்பு, வியாதி, கடன் எனப்படும் இடம் புனிதமடைகின்றது.

எதிரிகள் உதிரிகளாவர். பஞ்சாயத்துக்கள் சாதகமாகும். பணிபுரியும் இடத்தில் செல்வாக்கு உயரும். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை தானாக வந்து சேரும்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள் சுயசாரத்தில் குரு சஞ்சாரம் (13.4.2022 முதல் 30.4.2022 வரை)**

உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் பூரட்டாதி நட்சத்திரக் காலில் தனது சுய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது, நற்பலன்களை வழங்குவார். கல்யாண முயற்சிகள் கைகூடும்.




கடமையில் இருந்த தொய்வு அகலும். எதிர்பாராத மாற்றங்கள் இல்லம் தேடி வரும்.

**சனி சாரத்தில் குரு சஞ்சாரம் (1.5.2022 முதல் 24.2.2023 வரை)**

உங்கள் இராசிக்கு 8, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. உத்திரட்டாதி நட்சத்திரக் காலில், அஷ்டமாதிபதியான சனியின் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அவ்வளவு திருப்தியான பலன்கள் கிடைக்காது. முன்னோர் சொத்துக்களில் பாகப்பிரிவினை முடிந்தாலும் எதிர்பார்த்தவை கைக்கு கிடைப்பது அரிது. அவ் வப்போது தெய்வ வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள்.

**புதன் சாரத்தில் குரு சஞ்சாரம் (25.2.2023 முதல் 22.4.2023 வரை)**

உங்களுக்கு இராசிநாதனான புதன், சுகஸ்தானத்திற்கும் அதிபதியாவார். ரேவதி நட்சத்திரக் காலில் புதன் சாரத்தில் குரு சஞ்சாரம் செய்யும் பொழுது, ஆரோக்கியம் சீராகும்.

அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்து சேரும். உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். ஊர்மாற்றம், இடமாற்றம் நல்லவிதமாக அமையும். குடும்ப ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித்தவர்கள் விலகுவர்.

**குருவின் வக்கிர இயக்கம் (20.7.2022 முதல் 16.11.2022 வரை)**

உங்கள் இராசிக்கு கேந்திராதிபத்ய தோஷம் பெற்றவர், குரு பகவான். எனவே அவர் வக்கிரம் பெறும் பொழுது நற்பலன்களை வழங்குவார்.

இக் காலத்தில் தடையாகி நின்ற சுபகாரியங்கள் படிப்படியாக நடைபெறும். ஆதாயம் தரும் தகவல் அடிக்கடி வந்து சேரும். எதிர்பார்ப்புகள் ஒன்றிரண்டு நிறைவேறாமல் போனாலும் கூடியவரை நிறைவேறி விடும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தக் குருப்பெயர்ச்சியால் இடமாற்றம், வீடுமாற்றம் போன்றவை ஏற்படலாம். பொருளாதாரத்தில் பற்றாக்குறை ஏற்பட்டாலும் எப்படியாவது காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி விடும். குடும்பத் தகவல்களை மூன்றாம் நபரிடம் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது.

**வளம் தரும் வழிபாடு**

இந்தக் குருப்பெயர்ச்சியால் இனிய பலன்கள் கிடைக்க புதன்கிழமை தோறும் மகாலட்சுமி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சிறப்பு வழிபாடாக யோகபலம் பெற்ற நாளில் தட்சிணாமூர்த்தியை வணங்கலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொலைத்தொடர்...

காட்டினர்.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்கள், வெளியாருடன் தொடர்பு கொள்ள முடியாத வகையில் தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.

தொலைபேசிகளை முடக்கும் ஜாமர்கள் பொருத்தப்பட்டதால், தொலைபேசிகளை பயன்படுத்தி போராட்டக்காரர்களை ஒருங்கிணைக்க முடியாத நிலை ஏற்பட்டது. (ம-7)

# ஜனாதிபதி...

எதிராக போராட்டங்கள் வலுப்பெற்றுள்ள நிலையில் ஜனாதிபதி உரையாற்றவுள்ளார்.

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார் அல்லது ஊடக நிறுவனங்களின் தலைவர்களை அழைத்து கருத்து தெரிவிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.(ம-7)

# வங்கிகள்...

அத்தினங்களை பொது விடுமுறை தினங்களாக இலங்கை அரசாங்கம் பிரகடனப்படுத்தியிருந்தது.

எனினும் அனுமதிப்பத்திரம் பெற்ற அரச, தனியார் வங்கிகள் அனைத்தும் அத்தினங்களில் திறக்கப்படுமென இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ம-7)

# சதிகாரர்கள்...

தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி கட்டுவாப்பிட்டியில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில் நடந்த மிக மோசமான இரத்தம் சிந்துதலை எங்களால் மறக்க முடியாது. தற்போது ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் தேர்தலின்போது இந்த சம்பவத்தை முழுமையாக பயன்படுத்தியது.

இந்த பெரிய அழிவின் பின்னணியில் மிகப்பெரிய சதி இருக்கலாம் என்று அன்றே எமக்கு தோன்றியது. அந்த சதிகாரர்கள் யார் என்பது தற்போது எமக்கு வெளிப்பட்டு வருகிறது.

அந்த சூழ்ச்சியாளர்களுக்கு ஆட்சியை பிடிக்க முடியும். எனினும் அதனை பாதுகாக்க முடியாது.

கடவுளின் சாபம் அவர்கள் மீது பட்டுள்ளது. ஆட்சியை அதிகாரத்தை கைப்பற்றினாலும் அதனை பயன்படுத்த அவர்களுக்கு தெரியாது.

ஜனாதிபதி ஆணைக்குழு வழங்கிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு கோரினோம், இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அவற்றை நடைமுறைப்படுத்தாது முஸ்லிம் மக்கள் மீது மாத்திரம் குற்றத்தை சுமத்திவிட்டு, அதன் பின்னணியில் இருந்த சக்திகளை மூடிமறைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதற்கான சாபமே தற்போது ஏற்பட்டுள்ளது. இந்த அமைப்பு முறையில் சட்டமா அதிபர் அடிமையாகவே மாறிவிட்டார். இதனால், நீதியை பெற்றுக் கொள்ள மக்களுக்கு சந்தர்ப்பம் இல்லை" எனவும் பேராயர் கூறியுள்ளார். (ம-7)

# சர்வதேச...

பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் அலி சப்ரி, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் கே. எம். எம்.சிறிவர்தன ஆகியோர் இவ்வாறு பயணமாகவுள்ளனர். (ம-7)

# நோன்பு துறக்...

துக்கு நடுவே, ரமழான் நோன்பு துறக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் ஒன்றுதிரண்டு ஜனாதிபதியை பதவி விலகக் கோரியும் அரசுக்கு எதிராகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் அங்கு ஒன்றுதிரண்டிருந்த இஸ்லாமியர் தமது வழிபாட்டு முறையான நோன்பு துறப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ம-7)

# அத்தியாவசிய...

வதாக நிதி அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நேற்று வழங்கி செவ்வியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

5 வாரங்களுக்கு தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு இந்தியாவிடமிருந்து மேலும் 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவி கோர திட்டமிட்டுள்ளதாக நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, சீனா, அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் உதவியையும் கோரவுள்ளதாக நிதி அமைச்சர் கூறியுள்ளார்.

சர்வதேச இறையாண்மை முறிகளை மறுசீரமைக்கவும் கடனை மீளசெலுத்துவதற்கும் தேவையான கால அவகாசத்தை கோருவதற்கும் இலங்கை தயாராகவுள்ளதாக நிதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# ஜனாதிபதி செய...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வீடு செல்ல வேண்டும் என வலியுறுத்தி நேற்றுக் காலை முதல் காலிமுகத்திடல் வளாகத்தில் மாபெரும் தன்னெழுச்சிப் போராட்டம் இடம்பெற்றது.

நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வருகை தந்த பெருந்திரளான இளைஞர்களும் சமூக செயற்பாட்டாளர்களும் மக்களும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

இந்நிலையிலேயே காலிமுகத்திடலை அண்மித்த பகுதியிலுள்ள ஜனாதிபதி செயலகம், போராட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டது.

ஜனாதிபதி மற்றும் அரசுக்கு எதிராக விண்ணைப் பிளக்கும் கோஷங்களுடன் சுலோகங்களையும் அவர்கள் தாங்கி நின்றனர்.

இந்தப் போராட்டம் காரணமாக கொழும்பு நகரிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (ம-7)

# மைத்...

யாடியதாக தெரிவிக்கப்படுகிறது. சந்திப்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவும் கலந்து கொண்டிருந்தார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அரசுக்கு எதிராக போராட்டங்கள் பாரியளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் இந்த சந்திப்பு அரசியல் வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. (ம-7)

# இடி...

வதற்கான சிவப்பு எச்சரிக்கை நாட்டின் பெரும்பாலான பகுதிகளுக்கு விடுக்கப்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

21 மாவட்டங்களுக்கு கடுமையான மின்னலுக்கான முன்னறிவிப்பை திணைக்களம் விடுத்துள்ளது.

வடக்கு, வட மத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் 100 மில்லிமீற்றர் அளவான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்களை திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

வெல்லப்பட்டது அதிர்ஷ்டம்
08.04.2022 அன்று சீட்டிழுக்கப்பட்ட அபிவிருத்தி லொத்தர் சபையின் ராசி அதிர்ஷ்டம் (Lagna Wasanawa) ரிக்கெட்டில் நான்கு இலக்கங்கள் பொருந்தி ரூபாய் ஐந்து இலட்சம் பணப் பரிசு வெல்லப்பட்டுள்ளது. (C-4152)
விற்பனை முகவர் - அச்சுவேலி திரு.S.கிருஷாந்

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 09/04/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1234
சிம்மம் 0 0 7 3 5 5

மெகா பவர்
திகதி 09/04/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1080
H 25 03 11 36 50

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.04.09
சீட்டிழுப்பு இலக்கம் 041
மிதுனம் 25 39 47 56 மிதுனம்

மஹஜன சம்பத
திகதி 2022/04/09
சீட்டிழுப்பு இலக்கம் 4732
E 9 9 9 1 3 0

தன நிதானய
திகதி -2022.04.09
சீட்டிழுப்பு இலக்கம் - 762
X 15 28 37 81

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1709 நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022 / 04 / 09 தினம் சனி
G 10 35 48 76
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,994,961/-

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.04.09
சீட்டிழுப்பு இல: 3870
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,689,500/-
வெற்றி இலக்கங்கள் 11 16 27 63 H

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,024,991/-
திகதி 2022-04-09
சீட்டிழுப்பு வாரம் 3421
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 11 33 38 52
2 3 9 8 7 3 7
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,231,940/-

R 22 09 25 39 58
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 885
திகதி 2022.04.09 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 230,278,183/-

சம்வர்தன வாசனாவ
திகதி :2022-04-09
வெற்றி வாரம் : 501 | வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ.10,621,192/-
V 04 47 30 8
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.2,676,320/-
ரூ.10,731,496/-

அத கோடிபதி
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1535
சீட்டிழுப்பு திகதி: 2022.04.09
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,991,640/-
43 49 73 74 L


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றிற்கு கீழ் வரும் பணியாளர்கள் உடன் தேவை. முன்அனுபவம் விரும்பத்தக்கது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

- சமையலாளர் : யாழ்ப்பாணத்து பாரம்பரிய உணவு வகைகள் செய்யத் தெரிந்திருத்தல் வேண்டும்.
- தோட்டப் பராமரிப்பாளர்
- வரவேற்பாளர்(Receptionist)
- ரூம் (Room) துப்புரவுப் பணியாளர்
- Restaurant waiter

(10976)

**077 872 9806, 077 730 6473**

## மணமகள் தேவை

கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட ஐரோப்பாவில் பிரஜாவுரிமை பெற்று வசிக்கும் இந்திய வம்சாவளி தமிழ், இந்து செட்டியார், மகரம் திருவோண நட்சத்திரத்தில் 1982 இல் பிறந்த இளமை தோற்றமுள்ள மணமகனுக்கு படித்த அழகிய 32 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை.

முழு விபரங்களுடன் 00351 961 869 985 எனும் இலக்கத்தில் வட்ஸ் அப் (Whatsapp) மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

(10936)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 23 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- சுண்டிக்குளப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில்.
- A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன.
- 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் கட்டுக்கிணற்றுடன் பயன்தரும் 72 தென்னைகள் உள்ளன.

(10982)

**தரகர் தேவையில்லை**

பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

ஒரு பரப்பின் விலை **ரூ.450,000**

**ஜெயம் - 077 814 7389**
**077 241 7589**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(10854)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.

**TP: 077 780 3970, 074 007 1970**

## காணி விற்பனைக்கு

ஓட்டுமடச் சந்தியில் இருந்து 1ஆம் ஒழுங்கையில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

1 பரப்பின் விலை
**8 இலட்சம்**

பார்வையிடும் நேரம்
காலை 8.00 - மாலை 6.00 மணிவரை

(10970)

தொடர்பு:-
**077 862 6251, 074 008 9086**

## பணிப்பெண் தேவை

மானிப்பாய் நவாலியில் வீட்டு வேலைகள் செய்வதற்கு 35 - 45 வயதிற்கு இடைப்பட்ட நேர்மையான வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
**077 788 8325**

(10965)

## மணமகள் தேவை

மணமகன் விபரம் :
குடும்பம் - யாழ். இந்து கௌரவ குடும்பம், பிறந்த ஆண்டு- 1987, நட்சத்திரம்-சதயம் (3 ஆம்.பாதம்), தொழில் - ஆசிரியர், எதிர்பார்ப்பு - அரசபணி (ஆசிரியர் விரும்பத்தக்கது)
நேரடியாகவோ, தரகர் மூலமாக தொடர்பு கொள்ளலாம்.

(10886)

**076 270 3977**

## வீடு வாடகைக்கு

கொக்குவிலில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு (C-4151)
**077 004 4386**

## யாழ். வேலை வாய்ப்பு முகாம்

10 இற்கு மேற்பட்ட நிறுவனங்களின் 30 இற்கு மேற்பட்ட உடனடி வேலை வாய்ப்புகள்.

Interview : யாழ்பாடி ஹோட்டல், நல்லூர்
காலம் : 12.04.2022 9.00am-12.00pm

**DEWMAS**

**074 138 3368**
**077 773 3368**

(10983)

## உடனடி வேலை வாய்ப்பு

யாழ் நகரப்பகுதியில் உள்ள நிறுவனத்தில் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு வேலைக்கு ஆள் தேவை (C-4146)



சம்பளம் - 30'000/-

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777


# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 02.03.2022 அன்று இறைபதம் அடைந்த

அமரர்

## காசிப்பிள்ளை பரமானந்தம்

**(உரிமையாளர் - காசிப்பிள்ளை அன் சன்ஸ், லக்சுமி டிஜிற்றல் கலர் லாப் - சங்கானை)**

திதி : வளர்பிறை அமாவாசை



அவர்களின் அந்தியேட்டி நிகழ்வானது திடீரென அமுலான ஊரடங்கைத் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் இந்நிகழ்வானது இன்று ஞாயிற்றுக்கிழமை (10.04.2022) அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெறும். இவ்அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இன்று இடம்பெறும் அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் மரணச் செய்தியறிந்து தொலைபேசி வாயிலாகவும் மற்றும் முகநூல், வலைத்தளங்கள் வாயிலாகவும் அனுதாபச் செய்திகளை அனுப்பிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(10975)

பிறப்பு 27.12.1947

இறப்பு 02.03.2022

அராலி வீதி,
சங்கானை.

077 290 8787
076 655 1274

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 50.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 338

Viber 076 636 3378


வள்ளுவர் ஆண்டு 2053 | 10.04.2022 | தொலைபேசி : 021 222 3378




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## கடைசி நேரத்தில போய் கோட்டாவைச் சந்தித்த...

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

இன்று ஆலடிப் பிள்ளையாருக்குச் சங்காபிஷேகம் என்பதால் ஆலடியில சனக் கூட்டம்.

பண்டிதர் பரமலிங்கம் அவர்களின் தெய்வீகச் சொற்பொழிவுக்கும் ஏற்பாடாகி இருந்தது. பண்டிதரைத் தவிர, ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் எழுந்தார். கல்வியியல் துறைப் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்கள் காலமாகிவிட்டார்.

கல்வியியல் துறைக்குப் பெரும் பங்காற்றிய பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்களின் மறைவு எங்கள் கல்விப்புலத்திற்குப் பேரிழப்பாகும். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

அந்நேரம் பார்த்து இப்போது பண்டிதர் பரமலிங்கம் அவர்களின் தெய்வீகச் சொற்பொழிவு இடம்பெறும் என ஒலிபெருக்கியில் அறிவித்தல் வர, பண்டிதர் பரமலிங்கத்தின் உரை ஆரம்பமாகியது.

அன்பிற்குரிய பெருமக்களே! இறைவழிபாட்டினூடாக மனிதர்கள் தங்களைத் தெய்வீகத் தன்மை பொருந்தியவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

தெய்வீகம் அன்பு மயமானது. அதனாலேயே அன்பிற்குமுண்டோ அடைக்கும் தாழ் என்றார் வள்ளுவர்.

பெருமக்களே! நாம் எவருக்கும் துன்பம் இழைக்கலாகாது. அதிலும் குறிப்பாக சாமானிய மக்களை வதைக்கக் கூடாது. சாமானிய மக்கள் துன்பம் தாங்க முடியாமல்; ஆற்றாது அழுவார்களாக இருந்தால், அவர்களின் கண்ணீர் துன்பம் இழைத்தவர்களின் செல்வத்தைத் தேய்க்கும் படையாகும்.

இதனையே வள்ளுவப் பெருமான் **அல்லல் பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றோ செல்வத்தைத் தேய்க்கும் படை** என்றார்.

இதற்குப் பொருள் இன்றைய இலங்கை நாடு என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆம், தமிழ்த் தாய்மார் ஆற்றாது அழுத கண்ணீர் - அவர்கள் வீதியில் விழுந்து புரண்டு வைத்த ஒப்பாரி இன்று பெரும்படையாக மாறி இலங்கை நாட்டின் செல்வத்தை அழித்து விட, அதன் விளைவாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் ஆட்சியில் இருந்து விலக வேண்டும் எனப் பொது மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.

இதனால் ஆட்சித் தரப்பு கதிகலங்கி நிற்கிறது. இதுதான் ஆற்றாது அழுத கண்ணீரின் சக்தி எனக் கூறினார்.

பண்டிதரின் உரையை அமைதியாக இருந்து செவிமடுத்த ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள், உரை முடிந்ததும் ஆழ்ந்த யோசனையில மூழ்கியிருந்தனர்.

அந்நேரம் பார்த்து பண்டிதர் பரமலிங்கமும் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

**மூப்பர்:** இந்தா பண்டிதர் ஐயா வந்திட்டார். பண்டிதர் கூறியது முற்றிலும் உண்மை.

இந்தாப் பாருங்களன் இண்டைக்கு இலங்கை என்ன பாடுபடுகுதெண்டு.

**கங்காணி:** அதுசரி வாத்தியார் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள் உட்பட மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கேள்வி.

இந்த நேரத்தில எங்கட இந்தியத் துணைத் தூதரகம் தேவையான மருந்துப் பொருட்களையும் இதர பொருட்களையும் நேரடியாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்குத் தந்துதவ வேணும் எண்ட கோரிக்கையை நாங்கள் முன் வைப்பம்.

அதோட யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை நிர்வாகமும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்திட்ட மேற்படி கோரிக்கையை முன் வைப்பது மிகவும் அவசியமானது.

**விதானையார்:** வாத்தியார் எங்கட தமிழ் அரசியல்வாதிகள் குறித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீசற்குணராஜா அவர்கள் கூறியிருந்த கருத்தை நாங்கள் வரவேற்க வேணும். ஒரு பல்கலைக்கழகத் துணைவேந்தர் துணிந்து முன்வைத்த அந்தக்கருத்து உண்மையில எங்கட மக்கள் சமூகத்தில ஒரு புதிய கோணத்தில சிந்தனையைத் தூண்டுமெண்டு நான் நம்புறன்.

**சிறாப்பர்:** நீங்கள் என்ன சொன்னாலும் எங்கட அரசியல்வாதிகளிட்ட இதுகள் எதுவும் செல்லாது.

**பண்டிதர்:** ஏன்? சிறாப்பர் அப்படிச் சொல்லுறியள்.

**சிறாப்பர்:** தமிழ் அரசியல்வாதிகளிட்ட தூரநோக்கும் தீர்க்கதரிசனமும் இராஜதந்திரமும் இருந்திருந்தால், ஜனாதிபதி கோட்டாவைப் போய்ச் சந்திக்கினமோ. கடைசி நேரத்தில போய் ஜனாதிபதி கோட்டாவை சம்பந்தர் தரப்புச் சந்தித்தது எண்டால், அவர்களுக்கு அரசியலின் போக்கு எவ்வாறாக இருக்குது என்பதே தெரியவில்லை என்பதுதானே உண்மை.

**விதானையார்:** சிறாப்பர் அதுமட்டுமோ. தமிழ் அரசியல் கைதிகளின்ர விடுதலை தொடர்பில அலி சப்ரியைச் சந்தித்து கதையுங்க எண்டு ஜனாதிபதி சொன்னவராம்.

இப்ப ஒரு கிழமைக்குள்ள அலி சப்ரி இரண்டு அமைச்சுப் பதவியில இருந்து இராஜினாமாச் செய்திருக்கிறார். இனி சம்பந்தர் ஐயா ஆரோட கதைக்கப் போறார்.

அப்ப தமிழ் அரசியல் கைதிகளை ஏமாற்றுகிற ஒரு நாடகத்தைத்தானே ஜனாதிபதியுடனான சந்திப்பின் மூலம் சம்பந்தர் ஐயா அரங்கேற்றியிருக்கிறார்.

**சாத்திரியார்:** என்ன செய்யிறது கோட்டா கோ ஹோம் எண்டு சிங்களச் சனம் சத்தம் போடுகிற நேரத்திலதான்; எங்கட ஆட்கள் கோட்டாவைச் சந்திக்கினம் எண்டால், தமிழ் மக்களுக்கு இந்த ஜென்மத்தில உரிமை கிடைக்குமோ என்ன?

இவ்வாறு வாத்தியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினியின் வலி இப்போது புரிகிறதா?

> தமிழினத்திற்கு ஆட்சியாளர்கள் செய்த கொடுமையை சர்வதேசம் சர்வசாதாரணமாய் உணர்ந்திருந்தாலும் அந்த சர்வேஸ்வரன் சரியாய் உணர்ந்து அவர்களுக்கு, சரியான பாடம் புகட்டியிருக்கின்றான்.

நெருப்பு சுடும் என்பதைக் கூறமுடியுமே தவிர, அது சுட்டால் எப்படி வலிக்கும் என்பதை கூறிவிட முடியாது.

சீனி இனிக்கும் என்று கூறலாமே தவிர அந்த இனிப்புச் சுவை எவ்வாறு இருக்கும் என்பதை யார்க்கும் எடுத்தியம்பிவிட முடியாது.

தற்போதைய இலங்கைத் திருநாட்டின் நிலையும் இதுவே. ஆம், தற்போதைய ஆட்சியாளர்கள் மிகப் பயங்கரமானவர்கள் என்பதை தமிழினம் எப்போதோ கணித்திருந்தது.

அதை சிங்கள மக்களுக்கு கூற முற்பட்டிருந்தனர். அந்தக் கூற்று அவர்களிடம் எடுபடவில்லை.

பசி, பட்டினி என்பது தமிழினத்திற்குப் பழக்கப்பட்ட ஒன்று. பசித்தால் எப்படி இருக்கும் என்பதை எப்படி விபரிக்க முடியும்?

அந்தக் கொடும் வலியை அனுபவித்தால் மாத்திரமே புரிந்து கொள்ள முடியும்.

இப்போது சிங்கள மக்கள் பசியின் வலியை உணர்ந்து கொள்ள ஆரம்பித்து விட்டனர் என்பதுதான் உண்மை.

தாராளமாய் நடக்கும் மின்வெட்டு சிங்கள மக்களுக்கு புதிதாய் இருக்குமே தவிர அது தமிழினத்திற்கு ஒருபோதும் புதிதானதல்ல.

ஒரு காலத்தில் தமிழினம் குப்பி விளக்கை ஏற்றி வைத்துத்தான் தம் கடமை அனைத்தையும் செய்தது என்ற உண்மையை பெரும்பான்மை சிங்கள இனம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதிலும் இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன்பு மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 300 முதல் 400 ரூபா வரை விற்கப்பட்டது என்றால் நம்ப முடியுமா? ஆனால் நம்பித்தான் ஆக வேண்டும்.

பால்மாவைக் கண்ணால் கூட கண்டுவிட முடியாது.

வீட்டில் கோதுமை மா புட்டென்றால் அன்று அந்த வீட்டின் எல்லோருக்கும் இனம்புரியாத புளுகு.

பாணுக்கான வரிசை நீண்டு செல்லும். ஒருவருக்கு ஒரு இறாத்தல் பாண் தான் வழக்கப்படும்.

அதிலும் வரிசையில் நின்று கிட்டச் சென்றதும் பாண் முடிந்துவிட்டதாக வரும் அறிவித்தலின் வலி மிகக் கொடுமையானது.

குழந்தைகளுக்கு பால்மா இல்லை. தாய்மார்க்கு போதுமான சத்துணவு இல்லை. அதனால் பிள்ளைக்கு சரியாக பால் கொடுக்க முடியாத கொடும் நிலையை அனுபவித்த கணங்களை ஒருநாளும் நாம் மறந்து விடலாகாது. அந்த வலியை இற்றைக்கு 25 வருடங்கள் கழிந்து பெரும்பான்மைத் தாய்மார் உணர்ந்திருக்கின்றனர் எனின் இது இறைவனின் தீர்ப்பு என்பதை விட வேறு எதையும் கூறிவிட முடியாது.

எரிபொருள் இல்லை, எரிவாயு இல்லை, பால் மா இல்லை, மருந்து மாத்திரை இல்லை, அரிசி இல்லை, பருப்பு இல்லை, இங்கு வாழ முடியவில்லை என்று ஆளும் அரசுக்கு எதிராக பெரும்பான்மை சிங்கள இனம் எதிர்ப்பார்ப்பாட்டங்கள் கூட்ட ஆரம்பித்திருக்கும் இந்த வேளையில் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தழிழினத்தின் நீதியான போராட்டத்தை பெரும்பான்மைச் சிங்களவர்களிடம் தவறான சித்திரிப்புக்களுடன் காட்டப்பட்டது.

அதன் விளைவே இன்றைய இலங்கையின் படு மோசமான நிலைக்குக் காரணம்.

நீதியான தமிழினத்தின் போராட்டத்தை கொச்சைப்படுத்தி பயங்கரவாதம் என்ற முத்திரை குத்தி உலக நாடுகளின் ஒத்துழைப்புடன் அதை அழித்ததுமின்றி அந்தப் போரில் எத்தனை இலட்சம் அப்பாவித் தமிழினம் இறந்தது போக அதை இருட்டடிப்புச் செய்து அழிக்கப்பட்டவர்கள் பயங்கரவாதிகளே என்று கூறியவர்களே இந்த ஆட்சியாளர்கள்.

எமக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத்தந்தவர்கள் ராஜபக்ஷக்கள் என்று தலையில் வைத்துக் கொண்டாடிய அதே சிங்கள இனம் இன்று அவர்களைத் தூக்கி எறிந்துவிட்டனர்.

தூக்கியெறியப்பட்ட ஆட்சியாளர்கள் இல்லை இல்லை நாம் போக



மாட்டோம் என்று ஆட்சிக் கதிரையை அளுங்குப்பிடி பிடித்திருக்கின்றனர்.

பார்க்கும் இடமெல்லாம் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் என்ற நிலை வந்ததற்குப் பின்னரும் ஆட்சியாளர்கள் அமைதியாய் இருப்பது ஏன் என்கின்றதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

அரசுக்கு எதிரான அண்மைய ஆர்ப்பாட்டம் ஒன்றில் இலக்கத் தகடு இன்றிய மோட்டார் சைக்கிளில் முகத்தை மூடிக் கட்டியபடி போராட்ட களத்திற்குள் புகுந்த சீருடை தரித்தவர்கள் போராட்டக்காரரை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டமை பெரும் பேசுபடுபொருளாக மாற்றியிருந்தது.

ஆனால் 15 வருடங்களுக்கு முன்பு எத்தனை இளைஞர்கள் இலக்கத் தகடு இல்லாத மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

எந்தக் காரணங்களுமின்றிய கைதுகள், சித்திரவதைகள் இவை எல்லாம் தமிழினம் என்ற சிறுபான்மையினர் மீது திணிக்கப்பட்ட போது எவர்க்கும் தெரியவில்லை. இப்போது பெரும்பான்மையினர் மீதே பெரும்பான்மையைச் சேர்ந்த சீருடையினர் மேற்கொண்டுள்ளனர் எனும் போது. உணர வேண்டிய வலியை அவர்கள் உணர்ந்து கொண்டால் சரி.

அரசுக்கு எதிரான போராட்டக் களத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பற்றிய நினைவுபடுத்தல்கள் எழுந்த வண்ணமே உள்ளன.

பிரபாகரன் இப்போது இருந்திருந்தால் எமக்கு உதவி செய்திருப்பார், நாம் பட்டினி கிடக்க ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்,பிரபாகரனே! மறுபடியும் வாரும் என்று பெரும்பான்மைச் சிங்களவர்களே கூறும் அளவிற்கு நிலைமாறியிருக்கிறது.

ஒரு காலத்தில் பிரபாகரனை பயங்கரவாதி என்றும் ஆட்சியாளர்கள் மீட்பர்கள் என்றும் கூறிய பெரும்பான்மைச் சிங்கள மக்கள் இன்று ஆட்சியாளர்களை திருடர்கள் என்றும் பயங்கரவாதி எனக்கூறிய பிரபாகரன் நல்லவர் என்றும் கூறுமளவிற்கு நிலைமை மாறியிருக்கின்றது. இந்த மாற்றங்கள் எதனால் ஏற்பட்டுள்ளன என்பதை நாம் ஈன்று கவனிக்க வேண்டும்.

இதுவரை எல்லா இழப்புகளும் எல்லா கஷ்டங்களும், எல்லாத் துயரங்களும் தமிழினத்துக்கு மாத்திரமே நடந்தன. அதனால் அந்த இனம் மாத்திரம் வேதனையை அனுபவித்தது.

ஆனால் தமிழினம் பட்ட கஷ்டத்தின் சிறிதளவு கஷ்டத்தை எனினும் பெரும் பான்மை சிங்கள மக்கள் உணர்ந்திருக்கின்றனர்.

பசி பட்டினி என்பது எப்படி இருக்கும் என்பதை எடுத்தியம்பி விளக்கிவிட முடியாது.

அந்தக் கொடும் வலியை உணர்ந்தால் மாத்திரமே புரிந்து கொள்ள முடியும்.

ஆம், பசியின் வலியை பெரும்பான்மை சிங்கள இனம் இப்போதுதான் உணர்ந்திருக்கின்றது.

எமக்கு பசியின் வலியை தந்தவர்கள் இந்த ஆட்சியாளர்கள் தான் என்பதை சரியாகப் புரிந்து கொண்டுவிட்டனர்.

அதன் விளைவே இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் ஆட்சியாளர்களுக்கெதிரான போராட்டங்களைப் பார்க்கக் கூடியதாக உள்ளது.

ஒரு இனத்தை வதைத்து அந்த இனத்திற்கு கொடுக்க வேண்டிய சுதந்திரத்தைக் கொடுக்காது அவர்கள் முதுகுகளில் கொடும் சுமையேற்றிய போது அந்த இனம் விட்ட இரத்தக் கண்ணீரை சர்வதேசம் சர்வசாதாரணமாய் உணர்ந்திருந்தாலும் அந்த சர்வேஸ்வரன் அதை சரியாக உணர்ந்து, இவர்களுக்கு சரியான பாடத்தை புகட்டியிருக்கின்றார் என்பது சர்வ நிச்சயம்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

### என்ன வித்தியாசம்?



(நேற்றைய தொடர்ச்சி)

(அங்கிருந்தவர்கள் எல்லாம் என்னைப் பார்த்து கேலியாகச் சிரித்தார்கள். எனக்கு அவமானமாகப் போய் விட்டது என்றான். யோகி வேலுசாமியைக் கடிந்து கொண்டு "பிறர் மனம் புன்படப் பேசுவது கூடாது" என்று அறிவுரை கூறினார். அப்போது சீனப்பன் வந்து "சுவாமி! யோகிகளின் அருமை பெருமைகளை அறியாமல் அன்று உங்களைக் கண்டபடி பேசிவிட்டேன். என்னை மன்னியுங்கள்" என்று வணங்கினான்.

யோகியும் புன்னகை புரிந்தவாறே "மன்னிக்கும்படியாக அப்படி என்ன குற்றம் நீ செய்து விட்டாய்? உனக்கு ஏதாவது பிரச்சினை இருந்தால் சொல். நான் உதவுகிறேன்" என்றார். அவனும் என் மனைவிக்கு துஷ்டகிரக பலத்தால் ஏதோ ஒரு வியாதி பிடித்திருக்கிறது. அதை தாங்கள் தான் போக்க வேண்டும்" என்றான்.

யோகி சீனப்பனுடன் அவன் வீட்டிற்குச் சென்றார். அவர் மந்திரங்களைக் கூறி



அவனது மனைவியை ஆசீர்வதித்தார். மறுநாள் அவள் குணமடைந்து விட்டாள். அது கண்ட ராமையன் யோகியிடம் "சுவாமி! இந்த சீனப்பன் தங்களை வாய்க்கு வந்தபடி ஏசினானே. அவனுக்குப்போய் உதவி இருக்கிறீர்களே. இது ஏனோ?" என்று கேட்டான்.

யோகியும் "நானும் உன் போன்றவனே. நீ பிறரைக் கோபித்துக் கொண்டு உடனே மறந்தும் போகிறாய். நான் யார் என்னைக் கோபித்துக் கொண்டாலும் உடனே மறந்தும் போய் விடுவேன். நான் கோபம் கொண்டு ஒருவனை ஏதாவது கூறிவிட்டால் அது அவனது வாழ்க்கையையே பாதித்து விடும்" என்று கூறினார்.

ஒரு யோகிக்கும் ஒரு சாதாரண மனிதனுக்கும் என்ன வித்தியாசம் என்பது அப்போது ராமையனுக்குப் புரிந்தது. அவனும் கோபம் கொள்வதை விட்டொழித்தான்.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்

67



அடவியை அடைந்த இராமன், அறிவும் ஆசாரமும் மிக்க தவசிகளின் விருந்தினராய்த் தங்கி வந்தான். அத்திரி முனிவர் என்பவர் அவனை இன்முகம் காட்டி, இனிதுரை வழங்கி, நல்விருந்து அளித்தார். அவர் பத்தினாயாகிய அனசூயை சீதையிடம் சொந்த மகள் போல் பந்தம் காட்டினாள்; அந்தம் இல்லாத அழகுடைய சீதைக்கு அணிகலன் சேர்த்து, ஆடையும் தந்து, தங்கப்பதுமை போல் அலங்கரித்தாள்.

விண்டுரைக்க முடியாத பேரழகியாகிய சீதையைக் கண்டு விராதன் என்னும் கிராதன் அவளைத் தின்று விழுங்கக் கரம் பற்றி விண் வழியே இழுத்துச் சென்றான்.

வஞ்சனை மிக்க அவன் செயலை அஞ்சன வண்ணனாகிய இராமன் எதிர்த்து, அம்பு எய்து, அவளை விலக்கி அவனை எதிர்த்தான். படைகள் அவனைத் தொடவில்லை; படைக் கருவியால் அழிவு பெறாத வரங்களை பிரமனிடம் வாங்கி இருந்தான்.

மராமரம் ஒன்றை அவன் இராமன் மீது வீசினான். அது அவன் கைக்குச் சிக்கி வேரோடு பட்டது; கிளையோடு கெட்டது. இராமன் [illegible] அம்புகளை ஒரு சேர விட்டான்; அவன் முள்ளம் பன்றி போலக் காட்சி பெற்றான்; எனினும், விதிர் விதிர்த்து விடுதலை பெற்றான்; மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுச் சீறிய சிங்கம் எனப் பாய்ந்தான்.

வாள்கொண்டு அவன் தோள்களை வெட்டினான் இராமன்; வெட்டிய தோள்கள் மறு[illegible] அவன் தோள்கள் மீது ஏறி இருவரும் அமர்ந்தனர். அவன் அவர்களை உலகம் சுற்றும் வாலிபர்களாக்கினான். கருடன் மீது அமரும் திருமால் போல் இராமனும் இலக்குவனும் காட்சி அளித்தனர்.

வேறு வழியின்றி அவனை வெட்டிக் குழி தோண்டி மண்ணில் புதைத்தனர். விண்ணில் அவன் தேவ கந்தருவனாய்க் காட்சி அளித்தான்.

அவன் ஒரு கந்தருவன்; கலை ரசிகன், தும்புரு என்பது அவன் பெயர்; செல்வச் சிறப்புமிக்க அழகாபுரியில் வாழ்ந்து வந்தவன்; அரம்பை ஒருத்தி ஆடல் நிகழ்த்த, அவளை அவன் நாடினான். கலைஞன் காமுகன் ஆனான். இதையறிந்து அழகை வேந்தனாகிய குபேரன், அவனை "அரக்கனாகுக" என்று சாபமிட்டான். தேவனாகப் பிறந்தவன் அரக்க குணம் கொண்டு அழிவுப் பாதையை அடைந்தான். இராமன் திருவடி தீண்டப்பட்டதால் அவனுக்குச் சாப விமோசனம் கிடைத்தது; காந்தருவனாய் மாறினான்; நன்றி நவின்று விட்டு விண்ணுலகில் மறைந்தான். கல்லாக இருந்தவள் காரிகையாக மாறி, விமோசனம் பெற்றதைப் போல் முரடனாக இருந்த அரக்கன், சாப விமோசனம் பெற்று காந்தருவனாக மாறினான். இதுவும் கருத்துள்ள கதையாகும். கலை உள்ளத்தோடு ரசிக்க வேண்டியவன் காமப் பார்வையோடு அவளைப் பார்த்துத் தன் நிலை கெட்டான். அது அவனை அரக்கனாக மாற்றியது. சீதை புனிதமானவள். அவளைத் தொட்டான் என்றாலும், கெட்டான் என்ற நிலை ஏற்படவில்லை. தெய்வம் அவனை மன்னித்துத் தேவனாக மாற்றியது. பள்ளத்தில் விழுந்து இருப்பவர், தெய்வ அருள் பெற்றால் ஒளி பெற்று உயர் பதவி பெறுவர் என்பதற்கு அவன் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாலியே தேவையில்லை நீ தான் என் பெஞ்சாதி... பாடல் இப்போது பொருந்துதா மாமா?






நாட்டை நாடாகப் பார்க்காமல் இருந்ததன் விளைவு எப்படி இருக்கிறது வியாசரே?

**சுதன் — குப்பிழான்**

**காட்டை ஆண்ட பிரபாகரன் நாட்டை உருவாக்கினார். ஆட்சியாளர்களிடம் தற்போது நாடுமில்லை, காடுமில்லையே?**

மூன்று பேரிடம் AK 47 துப்பாக்கியை வழங்கினால் என்ன செய் வீர்கள் எனக் கேட்கப்பட்டது.
ஆள் 1 : இந்த பூமி அன்பின் வழி வந்தது. ஆயுத வழியை நான் வெறுக்கிறேன்.
அன்பு வழியையே நான் தொடர்வேன் என்றார்.
ஆள் 2: இந்த உலகில் எனக்குப் பிடிக்காத பலபேர் இருக்கிறார்கள். அவர்களைத் தேடித் தேடி சுட்டுக் கொல்வேன்.
ஆள் 3 : AK 47 துப்பாக்கி உலகின் மிகச் சிறந்த துப்பாக்கி. அதை நல்ல விலைபேசி விற்பனை செய்து விடுவேன் என்றார்.
இதில் இவர்கள் எந்த ரகம் என்று கண்டு பிடியுங்களேன்.

**ராஜேஷ் — யாழ்ப்பாணம்**

**காமடிப்பீஸ் என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல முடியுமா மாமா?**

தன் மனதில் எது படுகிறதோ அதை மற்றவர்களிடம் கேட்காமல் உடன் அமுலாக்குவது.
இதை புத்திசாலித்தனம் என தனக்குள்ளேயே எண்ணிக்கொள்வது.
இது ஆரம்பத்தில் சர்வாதிகாரச் செயற்பாடு போலத் தெரிந்தாலும் போகப்போக 23 ஆம் புலிகேசி வடிவேலு போலத்தான் தெரியும்.
புரிகிறதா தம்பி? புரிந்தவன் பிஸ்தா.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**நாட்டை நாடாகப் பார்க்காமல் இருந்ததன் விளைவு எப்படி இருக்கிறது வியாசரே?**

அரசன் அன்றறுப்பான். தெய்வம் நின்றறுக்கும் என்பதெல்லாம் முதுமொழி.
அரசன் அன்றறுப்பானோ இல்லையோ தெய்வம் அன்றே அறுக்கும் என்பது தான் உண்மையிலும் உண்மை.
இற்றைக்கு 13 ஆண்டுகளுக்கு முன்பு தம் மீட்பர் என்று கூறியவர்களின் வாயே இன்று திருடர்கள் எனக் கூறும் அளவில் இருக்கிறது நிலை.
காலம் எவ்வளவு வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது பார்த்தீர்களா?
எம்மை அழித்தவர்களுக்கு மறுபடியும் ஆட்சியைக் கொடுத்து அவர்களை வெல்ல வைத்தவர்களாலேயே வீட்டுக்குச் செல்லுங்கள் என சொல்ல வைத்திருக்கிறார் இறைவன்.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
**021 567 1532**
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**திருவரதராசா — வவுனியா**

**மக்களை வாழ வைக்கத்தானே அரசுகள்?**

அரசு என்றால் அப்படித்தான் இருக்க வேண்டும்.
ஆனால் இப்போது அப்படி இருக்கிறதா என்ற கேள்வி எழும் அல்லவா?
அந்தக் கேள்விக்கு பதில் இவ்வாறாக அமையும். தனது நாட்டின் சொந்த மக்களையே கொன்று குவித்துவிட்டு அவர்களை கொ(வெ)ன்ற நாளை வெற்றி விழாவாகக் கொண்டாடுபவர்கள் இருக்கும் வரை மக்களுக்கான ஆட்சியாய் எதுவும் அமைந்து விடாது.
அதுசரி தற்போது தென்னிலங்கை மக்கள் அரசிற்கு எதிராக கொதித்தெழுந்திருக்கிறார்களாமே. சபாஸ் சரியான போட்டி.

**சிவாஸ் — யாழ்ப்பாணம்**

**மின்சாரத் துண்டிப்பு ABCD... என வலயம் நீண்டு செல்கிறதே?**

மூன்று மணித்தியாலத்தில் இருந்த மின் துண்டிப்பு மிக நீண்ட காலமாக 7 1/2 இல் இருந்தது. அந்த 7 1/2 தான் அரசிற்கு 7 1/2 ஆக மாறியிருக்கிறது.
முதலில் A,B,C... இப்படி ஆங்கில எழுத்துக்களின் குறியீடு எந்த வலயம் என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.
A வலயம் என்றால் எது என்றே தெரியாத மக்கள் மின்சாரத் துண்டிப்பு பற்றி என்னத்தைச் செய்வது.
மக்களின் நலன் சார்ந்து சிந்திப்பவர்கள் எனின் முதலில் அதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.
நாட்டில் வாழும் அனைத்து மக்களும் BSc முடித்தவர்கள் இல்லை என்பதை சம்பந்தப்பட்டவர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

**மகேஸ்வரன் — வரணி**

**திருவிழாவில் உபயகாரர்கள் தெர்ப்பை வாங்குவது பிரச்சினையாக உள்ளதே. என்ன செய்ய முடியும்?**

தெர்ப்பை என்றாலே பிரச்சினை தான். அதிலும் நான் பெரிது நீ பெரிது என்ற அகங்காரம் கொண்டவர்கள் கையில் தெர்ப்பை போட்டால் எப்படி இருக்கும்?
மும்மலங்களையும் களையும் ஒரு குறியீடே ஆலயத்துள் மேலாடை களைவது. இதை புரியாமல் வீழ்ந்து வீழ்ந்து கும்பிட்டு பயன் என்ன?
அடுத்தவர் 10 கூட்ட மேளம் பிடித்தால் இவர் 15 கூட்டம் பிடிப்பதும் மற்றவர் கோயில் எல்லை வரை மின்குமிழ் கட்டினால் இவர் தன் வீட்டு வாசல் வரை கட்டுவதும் கடவுளைத் தேடும் வழியாக அமைந்து விடாது.
இவர்களைப் பிடித்து நாலு சாத்துச் சாத்தினால் எல்லாம் சரி வரும்.

**விஜயரட்ணம் — யாழ்ப்பாணம்**

**சீதையை மீட்க இராமன் இலங்கை வந்தாரே?**

அன்று இராவணனிடம் இருந்து சீதையை மீட்க இராமன் வந்தான்.
இன்று இலங்கையைக் கடனில் இருந்து மீட்க யார் வருவார்கள். கடன் கேட்காதவர் உலகில் எவரும் இல்லை என்ற நிலையில் இருக்கிறது நாடு.
அதைவிட நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நிற்கின்றனர் ஆட்சியாளர்கள்.
இப்போது இருக்கும் நிலையில் எந்த மீட்பர் வந்தாலும் நாடு வழமைக்குத் திரும்ப மூன்று வருடங்களாவது ஆகும். அதற்குள் நாங்கள் உயிருடன் இருக்க வேண்டுமே.

**திவ்யன் — வதிரி**

**தாலியே தேவையில்லை நீ தான் என் பெஞ்சாதி... பாடல் இப்போது பொருந்துதா மாமா?**

ம்... நன்றாய் பொருந்தும். பவுண் விற்கும் விலையில் 10 பவுணில் தாலி கட்ட அவனால் முடியுமா என்ன?
அதனால் இப்படி ஒரு பிளான் போட்டு தாலியே தேவையில்லை நீ தான் என் பெஞ்சாதி என்று பாடல் படித்திருப்பார்.
அதுசரி அதற்கு பெண் ஒத்துக் கொள்ள வேண்டுமே. அப்பா தாற 20 இலட்சத்தை வாங்கிட்டு நீ எனக்குத் தாலி கட்ட மாட்டாயா? என்று கடுப்பாகினால் நிலை எப்படி இருக்கும் சொல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய் மொழி



தாயில்லமல் தரணியில் யாரும் இல்லையே
தாயின் அரவணைப்பு நீங்காத இன்பமல்லவா
தாயின் சொல்லை தட்டிய பிள்ளைகள்
நாடு போற்ற வாழ்ந்ததாக வரலாறு இல்லையே

சமூகத்தில் பத்திமான்களாக வாழ்வதற்கு
கடிவாளமாக இருப்பவள் தாயல்லவா
கண்டதும் உண்ணாமல் கண்டிப்பாய் - இருப்பவள்
கண்விழித்து எம்மை காப்பவளும் தாயல்லவா

சொர்க்கம் ஒன்று உண்டென்று நீ- கேட்டால்
என் தாயின் மடிதான் சொர்க்கம் என்பேன்
கோயில் சென்று கும்பிடுகிறோம்- தாயே என்று
தெய்வ வடிவில் தாய் இருக்கிறதை மறக்கின்றோமே

தாகம் தீர்க்கும் நீராய் நீ இருக்கின்றாய்
பசி போக்கும் உணவாய் நீ வாழ்கின்றாய்
நாடு போற்ற எம்மை வாழ வைக்கின்றாய்
விருட்சமாய் இருந்து எமக்கு விடிவைத் தருகின்றாயே

எஸ்.பி.தனா,
தெல்லிப்பழை.

## என் தேவதை

வண்ணங்கள் கொண்ட மலர்
சோலைக்கு எனை அழைத்து
வாழ்வின் வண்ணங்கள்
காட்டியவள் அவள்
இன்பங்கள் ரசிக்க கற்றுத்தந்தவள்
புல் நுனியில் பனித்துளியை
பூவிதழின் மழைத்துளியை
ரசிக்க கற்றுத்தந்தவள் அவள்
துன்பங்கள் மறக்கவும்
தீயவை விலக்கவும் கற்றுத்தந்த
அவள் என் தேவதையே
அன்பான அன்னையும் அவளே

தி.திருமாலினி,
சங்கத்தானை.

## பறக்கும் பறவைகள் வானிலே

பறக்கும் பறவைகள் வானிலே
அவை பாடும் கீதம் காற்றினிலே
என்னை அழைக்குதே! இயற்கை உலகமே!
இரவில் நிலவில் வானிலே
புள்ளி ஒளிகள் தாரகைகள்
என்னை அழைக்குமே! இயற்கை உலகமே!

மலைகளில் பசுமை பரந்தே
அங்கு அருவி நீர் வீழ்ந்து பாயுமே
என்னை அழைக்குமே! இயற்கை உலகமே!
நீளும் நீலக்கடலின் அலையில்
வாழும் மீன்கள் ஓயுமா? என்னை அழைக்குமே!
இயற்கை உலகமே!

ஆறுமுகம் சிவபாதம்,
இணுவில்.

## வாழையடி வாழை



மலிவான துரித உணவு
கனியுப்பு பொட்டாசியம்
கனியிலே விற்றமின் சி அதிகம்

மாப்பொருட்கள்
மதிக்கும் அளவுக்கு
பதிவான கொலஸ்ரோல் கரைக்கும்
அதிகளவு நார்ச்சத்து,

எங்கேயும் எப்போதும் வாங்கலாம்
விரியும் வாழை இலை
பரவலாக பழங்கள் பற்பல
வெட்டி எறியும் குத்தியில்
மத்திற தண்டிலே
ருசியாக கறி சமைக்கலாம்
இடித்துத் துவைத்து சம்பல் செய்யலாம்
விரைவாக வளரும் பயிர்
வாழையடி வாழையாக

சி.குமாரலிங்கம்
செம்மணி வீதி, நல்லூர்

## மௌனத்தின் தேடல்- 556



### தவிக்கும் விழி

பார்த்த பார்வையில்
விடுதலை வேண்டுமில்லை
தெருவில் கண்ட காட்சியால்
விழிகள் நோகுதோ!
நட்பை இழந்தானோ!
வீதியில் எறிந்த எஜமானின்,
அன்பை இழந்தானோ!
விழிகளின் வாட்டம் கண்டு
அவனை விட்டு விடுங்கள்

சு.சுருத்திகா,
யா/யா.இ.ம.க

### காலடியில் காத்திருப்பாய்

வீட்டைக் காவல் காப்பாய் நகர்
காவலர்க்கு தடையம் காட்டுவிப்பாய்
காலை நடை பயல துணையாவாய்
கட்டிலில் கிடந்தால் எசமான்
காலடியில் காத்திருப்பாய்
உடன் கட்டை ஏறுவதாய்
உண்ணாமல் கிடந்து
ஒரிரு கிழமை கட்டுக்குள்
உன் உயிரும் சேர்ந்தே போகும்
உனக்கா இந்த நிலைமை?

வைகதன்,
கொக்குவில்.

### எங்கள் எசமான்

நன்றிக்கு வாலாட்டும் உன் வாலை
நறுக்கிடுவர் துடிக்கப் பதைபதைக்க
வெட்டிச் சாம்பல் அடைந்து தைப்பர்
எச்சில் உணவு வைப்பர் பயணத்தில்
பின்தொடரக் கல்லால் அடிப்பர்
கடும் வார்த்தையாலே படலை வரை
விரட்டுபவரை நன்றி உணர்வோடு
மன்னிக்கும் மனசு யார்க்கு வரும்.

கார்வண்ணன்,
காவலூர்.

### காத்திருப்பு

காத்திருக்கும் பூனைக்கு பால் தேவை
காத்திருக்கும் காதலனுக்கு காதலி தேவை
காத்திருக்கும் மாணவனுக்கு ஆசிரியர் தேவை
காத்திருக்கும் முதலாளிக்கு வேலையாள் தேவை
காத்திருக்கும் உனக்கு எஜமான் தேவையா?
உணவு தேவையா? உறவு தேவையா?
காத்திருக்கும் எனக்கு பதில் சொல்வாயா நீ!

ஞா.சனோசிலியா,
சுருவில் வீதி, ஊர்காவற்றுறை.

### சுதந்திரமில்லை

மனிதன் விதித்த சிறைக்கூண்டுக்குள்
சிக்கிக் கொண்ட ஐந்தறிவு மிருகமே
சிறைக் கூண்டுக்குள் இன்று இப்படிச்
சிறைவாசம் அனுபவிக்கும் உன்னைப் போன்றே
நம் நாட்டில் தமிழர்கள் எமக்கு என்றும்
பேச்சுச் சுதந்திரமில்லை

சுப்பிரமணியம் ஜெயரூபன்,
பருத்தித்துறை.

## மௌனத்தின் தேடல்- 557



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

### பதில்

தாயாய் உதவும் கரம் நீ
தந்தையாய் காக்கும் வரம் நீ
பள்ளிக்கு அழைத்துச்
செல்லும் துணை நீ
பகைவரை விரட்டும் உறவு நீ
பாசத்தைப் பொழியும் உருவம் நீ
நன்றியைக் காட்டும் மிருகம் நீ
என்னோடு விளையாடும்
போட்டியாளர் நீ எல்லோரும் விரும்பும்
விலங்கு நீ-ஆனால்
இன்று கூண்டுக்குள் அடைபட்டுக் கிடக்க
காரணம் யார்? நீயா? உனது செயலா!
ஏங்குகிறேன் உனக்காய்

ஜெ.ஜெறிஸ்,
யா/ஊர்காவற்றுறை
றோ.க.த.ஆ. பாடசாலை.

### ஆறறிவும் ஐந்தறிவும்

கூட்டுக்குள் உனை அடைத்த
குற்றவாளிகட்கு ஆறறிவாம்
ஏட்டில் நன்றிக்கு நாயகமாய்
எடுத்துரைக்கும் ஐயறிவுக்கு
நாட்டில் நடமாட நல்விதியை
நனி சிறக்க வழிகாட்டு ஆண்டவனே!
தவறின் கூண்டோடு கொலை செய்து
கொணரும் வாலை எண்ணி
வயிற்றுப் பிழைப்போரே நீதி இதா...


சாமிபுத்திரன்,
சரவணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**குயிலனும் மனைவியும் உடனடியாகவே முகாமிலிருந்து விடுதலையாகிறார்கள் என்ற செய்தி முகாமெங்கும் பரந்தோடியது. 'சார்ளி கம்பவுண்ட்' குடும்பங்கள் குயிலனின் அறைக்கு ஓடிச் சென்றார்கள். அறைக்கு வெளியில் எல்லோரும், தமக்கு விசா கிடைத்தது போன்ற குதூகலத்தில் துள்ளிக் குதித்தார்கள்.**

## வலி சொல்லும் தொடர்... 27




மெல்போர்ன் அகதிகள் தடுப்பு முகாமில் வந்திருந்த நீதனைப் பற்றி மாத்திரமன்றி, சகல அகதிகளினதும் தலையில் புள்ளி வைத்து சித்திரம் வரைந்து, அவர்களின் பூர்வீகம், நட்சத்திரம் முதற்கொண்டு அனைத்தையும் தகவல்களாகச் சேகரித்துக்கொண்டிருந்தது ஆஸ்திரேலிய புலனாய்வுத் துறை. வெவ்வேறு முகாம்களில் வந்திருந்தவர்களின் படங்களைக் காண்பித்து, 'இவரைத் தெரியுமா?' என்ற கணக்கில் ஏராளம் கேள்விகளைக் கொட்டி விசாரணைகளை ஆரம்பித்தார்கள்.

போரிலிருந்து உயிர்தப்பி தஞ்சம் கேட்டு வந்தவர்கள் என்ற எந்த தாட்சண்யமும் இல்லாமல், வந்தவர்களிலிருந்து கிரிமினல்களை வடிகட்டி எடுக்க வேண்டும் என்ற அதீத அவதானத்துடன் புலனாய்வுப் பிரிவினர் நாடெங்குமுள்ள அகதிமுகாம்களில், பதி கருவிகளோடு பாசி போல ஒட்டிக்கிடந்தார்கள்.

இஸ்லாமிய தேசங்களிலிருந்து வருகிற அகதிகள் குறித்து அவதானமாக இருக்க வேண்டும் என்று ஆஸ்திரேலியப் பாதுகாப்புத்துறை ஆய்வாளர்கள், மைக் நீட்டிய ஊடகங்கள் அனைத்திடமும் மந்திரம் போல உச்சாடனம் செய்துகொண்டிருந்தார்கள். பெரிய பெரிய இராச்சியங்களின் சரிவுதான் பல உதிரிப் போராளிக்குழுக்களை உருவாக்குவது வழக்கம் என்றும், தனியாக இயங்கும் பயங்கரவாதிகளைப் பிரசவிப்பது வரலாறு என்றும் ஆவணங்களை முகத்துக்கு முன்னால் ஆட்டியபடி 'ஆய்வாளர்கள்' என்ற பெயரில் பலர் ஆஸ்திரேலிய மக்களை பயம் காட்டினார்கள்.

ஆஸ்திரேலியாவை நோக்கி வருகிற அகதிப்படகுகள் அனைத்தையும், தற்கொலைத் தாக்குதலுக்குக் குண்டு நிரப்பிக்கொண்டு வருகின்ற படகுகள் போலவே கண்டு, தேசம் அச்சம் கொள்ள வேண்டும் என்று அரசின் கொள்கைகளுக்கு சாம்பிராணி தூவுகிற ஊடகங்களில், ஆஸ்தான ஆய்வாளர்கள் பல்ர் அறைகூவிக்கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு அரசால் உருவாக்கப்பட்ட கடுமையான அகதி எதிர்ப்புக் கொள்கையை ஊடகங்கள் மக்கள் மத்தியில் நியாயப்படுத்திக்கொண்டிருந்த காலப்பகுதியில், கரை சேர்ந்த அகதிகள் ஆஸ்திரேலியா முழுவதுமிருந்த முகாம்களில் கடும் விசாரணைகளுக்குள் தோய்த்து எடுக்கப்பட்டார்கள்.

ஆள் கடத்தல்காரர்கள், சொந்த நாட்டில் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள், ஆயுதங்களைப் புழங்கியவர்கள் ஆகியோர் முதற்கொண்டு, தாங்களும் புரட்சிவாதிகள் என்று படம் காண்பித்த பலரும் கூட இந்த வலையில் வீழ்ந்தார்கள்.

இவ்வாறு ஆஸ்திரேலியப் புலனாய்வுத்துறையினரால் கவனமாகக் கழுவி எடுக்கப்பட்ட அகதிகளில், இந்தோனேசியாவிலிருந்து படகேறிய கானகன் அகப்பட்டான். கொழும்பில் நீதனுக்கு வலமும் இடமுமாக நின்று பணியாற்றியவன் கானகன்.

கொழும்பு நடவடிக்கைகளுக்கும், கிளிநொச்சிக்குமான குருவியாக யார் கண்ணிலும் தெரிந்துவிடாமல், பறந்து நுழைந்து வந்து போய்க்கொண்டிருந்தவன் அவன். ராதாவைக் கொழும்புக்கு அழைத்து வந்தது முதல், நீதனுக்கும் கிளிநொச்சிக்குமான இறுதிக்கட்டத் தொடர்புகள் வரை கூடவே கரைந்து கிடந்தவன்.

டார்வின் அகதிகள் முகாமில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டபோது, நீதனைப் பற்றியும் ராதாவைப் பற்றியும் முழுமையாக எதுவும் சொல்லிவிடாவிட்டாலும், அவர்களது கொழும்பு நடவடிக்கைகள் ப[illegible] தகவலை [illegible]வுப் பிரிவினரிடம் ஒப்புவித்தான்.

கடலிலிருந்து கழுவியெடுத்த மீன்போல ஆஸ்திரேலியப் புலனாய்வுப் பிரிவினர் முன்பாக, நீதன் துடித்தான். எல்லாக் கேள்விகளையும் சுழற்றிச் சுழற்றி வீசினார்கள் விசாரணையாளர்கள். நீதன் இயன்ற அளவு எல்லாவற்றையும் சமாளித்தான். கொழும்பில் விடுதலைப் புலிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட உணவகம் ஒன்றில் பணிபுரிந்ததாகவும், அதில் கிடைத்த வருமானத்தில் ஒரு பகுதியை புலிகளுக்கு வரியாகச் செலுத்தியதாகவும், தான் முன்வைத்த கதையில் உறுதியாக நின்றான் நீதன். அதன் பிறகு, பயத்தில் இந்தோனேசியாவுக்கு வந்து, அங்கேயும் உணவகத்தை ஆரம்பித்ததாகத் தனது கதைக்கு அலங்கரமான ஆணிவேரைப் பொருத்தினான்.

ஆஸ்திரேலியப் புலனாய்வுத்துறை விசாரணையாளர்கள் எவ்வளவுதான் முயன்றும், அவர்களால் ஆதாரத்துடன் நீதனை நிரூபிக்க முடியவில்லை. ஆனால், நீதன் நிச்சயம் பொய் சொல்கிறான் என்ற தங்களது சந்தேகத்தை அவர்கள் உறுதியாக நம்பினார்கள்.

அந்தச் சந்திப்புக்குப் பின்னர், நீதன் தனக்கு முகாமிலிருந்து விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையை இழந்தான். தனது வாழ்வின் முழுமையான உண்மை ஆஸ்திரேலிய அரசின் கைகளில் உள்ளது என்ற அச்சம், பெரும் தோல்வியை அவனுக்குள் விதைத்தது.

[illegible] மீது எழுந்த வெறுப்பும், ஒரு பெரும் போர் நிலத்தில் பெருக்கெடுத்துப் பாய்ந்த துரோக நதி கடைசியில் ஆஸ்திரேலியா வரை வந்து, தன் மீதும் ஒரு துளியை விடமாக வீசிச் சென்றிருக்கிறது என்ற சீற்றமும் அவனுக்குள் கொந்தளித்தபடியிருந்தன.

ஆஸ்திரேலியப் புலனாய்வுத் துறையினரின் சந்திப்பு நிறைவடைந்த பிறகு, 'சார்ளி கம்பவுண்ட்' பக்கம் நீதன் போகவில்லை. 'அல்பா கம்பவுண்ட்' பக்கம் அவ்வப்போது எட்டிப் பார்த்துவிட்டுச் சென்ற ராதா, வெளித்திடலில் பந்து விளையாடிக் கொண்டிருந்த பெடியன்களிடம் நீதனைப் பற்றி விசாரித்தாள். நீதன் இரண்டு மூன்று நாட்களாகப் பகல் வேளையிலும் நன்றாக நித்திரை கொண்டான்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு, அன்று மாலைதான் சார்ளி கம்பவுண்டுக்குப் போனான். காரணம், அன்று முகாமே குதூகலித்துக் கொண்டிருந்தது.

கடலில் குழந்தையை இழந்த குயிலனையும் மனைவியையும் பார்த்து ஆறுதல் சொல்லி ஆசீர்வதிப்பதற்கென்று, ஆஸ்திரேலிய அரசு சார்பற்ற அமைப்பொன்று கிறிஸ்தவ பாதிரியார் ஒருவரையும் அழைத்துக்கொண்டு அன்று மாலை முகாமுக்கு வந்திருந்தது. குயிலனும் மனைவியும் அவர்களுடன் விருந்தினர் மண்டபத்திலிருந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது, இருவரையும் உடனடியாக அழைத்து வருமாறு, குடிவரவுத்துறை அமைச்சு அதிகாரிகள் வானொலியில் அறிவித்தார்கள். . சந்திப்பு அறைக்கு ஓடிச் சென்ற குயிலன் தம்பதியருக்கு உடனடியாகவே தற்காலிக விசா விண்ணப்பங்களைக் கொடுத்து, கையெழுத்திடச் சொன்னார்கள் அதிகாரிகள். ஆஸ்திரேலியா நோக்கிப் படகேறிய பிறகு, முதன்முதலாக நல்ல செய்தியொன்று அன்று அவர்களின் முன்னால் பொழிந்தது. குயிலனும் மனைவியும் உடனடியாகவே முகாமிலிருந்து விடுதலையாகிறார்கள் என்ற செய்தி முகாமெங்கும் பரந்தோடியது.


'சார்ளி கம்பவுண்ட்' குடும்பங்கள் குயிலனின் அறைக்கு ஓடிச் சென்றார்கள். அறைக்கு வெளியில் எல்லோரும், தமக்கு விசா கிடைத்தது போன்ற குதூகலத்தில் துள்ளிக் குதித்தார்கள். தமிழ்ப் பெண்கள் சிலர் குயிலன் தம்பதியரின் அறைக்குள் சென்று, அவர்களது பொருள்களைப் பொதி செய்வதற்கு உதவி செய்தார்கள். தங்களுக்கும் ஒரு நாள் இப்படி விசா கிடைக்கும் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் அவர்களது முகம்முழுவதும் பொங்கி ஓடின.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## மஞ்சளழகி




அவன் பதிலில் புதைந்து கிடந்த பொருளை நொடிப் பொழுதில் புரிந்து கொண்டாள் அவள். பெண்கள் சில சமயங்களில் காட்டும் நாணக் குறைவைக் குத்திக் காட்டவே அவன் அப்படிப் பதில் சொல்லியிருக்கிறானென்பதை அறிந்து கொண்ட அவள், "உங்களுக்கு விஷமமும் இருக்கிறது" என்றாள் நான்காம் முறையாக.

"என்ன!" வியப்புடன் கேட்டான் இளைய பல்லவன். "நீங்கள் மாவீரர் என்றேன் - அடக்கத்தைக் காட்டினீர்கள். உங்களுக்கு அடக்கமிருக்கிறதென்றேன்-வெட்கத்தைக் காட்டினீர்கள். வெட்கமிருக்கிறதெனறேன்- என்னைக் குத்திக் காட்டி உங்களுக்கு விஷமமும் உண்டு என்பதை நிரூபித்தீர்கள் அடக்கம், வெட்கம், விஷமம் ஆகிய குணங்கள் எனக்கு மிகவும் பிடிக்கும்" என்றாள் அவள் உள்ளத்தைத் திறந்து காட்டி.

"ஏன்?" அவளுக்குப் பதில் சொல்லத் தெரியாததால் ஏதோ கேட்க வேண்டும் என்பதற்காக அந்த ஒற்றைச் சொல்லை உதிர்த்தான் இளையபல்லவன்.

"அடக்கம் வீரத்துக்கு அடையாளம். வெட்கம் பண்பாட்டுக்கு அடையாளாம். விஷமம் ரசிகத் தன்மைக்கு அடையாளம்" என்று அவள் பதில் சொல்லி அவனைப் பயமின்றி ஏறெடுத்துப் பார்த்தாள். இத்தனை சம்பாஷணைக்குப் பிறகும் இளைய பல்லவன் ஒரு நிலையை அடையாமலே தத்தளித்தான். இருப்பினும் சமாளித்துக் கொண்டு. "மனோதத்துவத்தை நீங்கள் நன்கு அறிந்து கொண்டிருக்கிறீர்கள்," என்று கூறினான்.

பதிலுக்கு அவள் அடக்கத்தைக் காட்டவுமில்லை, நன்றி கூறவுமில்லை. "ஆம்" என்று சர்வசாதாரணமாக ஒப்புக்கொண்டாள். அந்த "ஆம்" அந்தப் பாராட்டுதல் தனக்குத் தகும் என்பதை ஒப்புக்கொள்வது போல் இருந்தது. இதனால் வியப்புடன் அவளை ஏறெடுத்துப் பார்த்த இளையபல்லவனை நோக்கி அவள் நகைத்துவிட்டு. "உங்கள் பாராட்டுதலை நான் ஒப்புக்கொண்டது உங்களுக்கு வியப்பாயிருக்கலாம்.

ஆனால் நீங்கள் சொன்னதில் தவறேதுமில்லை. எனக்கு மனோதத்துவம் தெரியாதிருந்தால் இந் அக்ஷயமுனையில் நான் ஒருநாள் ஜீவித்திருக்க முடியுமா? கொள்ளையர் நடுவில் பயமின்றி உலாவ முடியுமா?" என்றாள்.

"கொள்ளையர் நடுவில் உலாவு வீர்களா!" மிகுந்த ஆச்சரியத்துடன் எழுந்தது இளைய பல்லன் கேள்வி கற்பையோ ஒழுக்கத்தையோ இம்மியளவும் மதிக்காத கொள்ளையர் கூட்டத்தில் இத்தகைய ஒரு பெண் சிக்கினால்...?" நினைக்கவும் பயந்தான் இளைய பல்லவன்.

அவன் முகபாவத்தை அந்த அழகி கவனித்தாள். நகைத்துவிட்டுச் சொன்னாள்: "உங்கள் வியப்புக்குக் காரணமிருக்கிறது. என்னுடன் பழகிய பலரும் உங்களைப் போல் வியப்படைந்திருக்கிறார்கள்... ஆனால் இதில் எனக்கு வியப்பில்லை. கொள்ளைக்காரிடம் எனக்கு அச்சமில்லை. அவர்களுக்குத் தான் என்னிடம் அச்சமிருக்கிறது. நான் இஷ்டப்பட்டால் அவர்கள் என்னைச் சுற்றி வளைக்கலாம்.

இல்லையேல் தொலை தூரத்தில் நிற்கவேண்டும்" என்ற அவள் சரேலெனப் பின்னடைந்து, தன் தந்தையும் இளைய பல்லவனும் ஒருவரையொருவர் நேரில் பார்த்துக் கொள்ள இடம் விட்டுத் தன் இடது கையைக் கோட்டைத் தலைவனை நோக்கிச் சுட்டிக்காட்டி, வலது கையைத் தன் மார்பின் மீது வைத்து. "இதோ இருக்கும் என் தந்தை கோட்டையின் தலைவராயிருக்கலாம். கொள்ளைக்காரர்களின் தலைவர் இவரல்ல, நான்தான்!" என்றாள்.

ஏதோ நாட்டிய முத்திரைபோல் மார்பில் வைக்கப்பட்ட இந்தக் கையும் அபிநய பாவங்கள் முகத்தில் துளிர்த்த அழகுக் குறிகளும் இளைய பல்லவனைக் கவர்ந்த தன்றி அவள் சொற்களில் தொனித்த எல்லையற்ற துணிவும் அவனுக்கு வியப்பையே அளித்தன. உடல் முழுவதும் மயக்கந்தரும் மஞ்சள் நிறமோடிய அந்த மஞ்சளழகியை நன்றாக ஏறெடுத்து நோக்கிய இளைய பல்லவன் வணக்கத்துக்கு அறிகுறியாகத் தலை தாழ்த்தி, அப்படியானல் நான் வந்த அலுவல் சுலபமாகிறது?" என்றான்.

"எந்த அலுவல்?" என்று கேட்டாள் அவள்:

"சில முக்கிய கோரிக்கைகளுடன் தங்கள் தந்தையிடம் வந்தேன்."

"என்ன சொன்னார்." "இன்னும் சரியான பதில் இல்லை."

"உங்களைப் போன்ற கொள்ளைக்காரருக்கு... மன்னிக்க வேண்டும்... வீரருக்கு என் தந்தை எதையும் மறுக்க மாட்டாரே!"

"மறுக்கவில்லைதான். இருந்தாலும்..."

"யோசிக்கிறார். அது சகஜம் தானே? ஒரு நாள் அவருக்கு அவகாசம் கொடுங்கள். இன்றிரவு நிகழ்ச்சி முடியட்டும்," என்ற அவள் திடீரெனத் தன் தந்தையின் பக்கம் திரும்பி, "ஏனப்பா! இன்றைய இரவு நிகழ்ச்சிக்கு இவரையும்..." என்று தொடங்கினாள்.

அடுத்த விநாடி அறை அதிர்ந்தது. "போ உள்ளே. உன்னை யார் வரச் சொன்னது இங்கே?" என்று கூவினான் கோட்டைத் தலைவன். அவன் உணர்ச்சிகளைத் திடீரென அத்தனை தூரம் உலுக்கிவிடக்கூடிய அந்த நிகழ்ச்சி எதுவாயிருக்கும்? ஏதும்புரியாமல் கோட்டைத் தலைவனை நோக்கினான் சோழர் படைத் தலைவன். கோட்டைத் தலைவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது.

### முன்னேற்பாடு

அன்றைய இரவு நிகழ்ச்சிக்குத் தன்னையும் அழைக்க வேண்டுமென அந்த அழகுச்சிலை கூற முற்பட்ட வார்த்தையை முடிக்கா முன்னரே, "உன்னை யார் வரச் சொன்னது இங்கே? போ உள்ளே!" என்று அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவன் அந்த அறையே அதிரும்படியாகக் கூவியதைக் கேட்டதும் சற்றுக் குழம்பவே செய்தான் இளைய பல்லவன்.

எண்ணங்களைச் சிறிதும் புறத்தே காட்டாத ஆழ்ந்த உள்ளம் படைத்த அந்தக் கிராதகனே கட்டுப்பட்ட தன் உணர்ச்சிகளைக் காற்றில் உதறிவிட்டு கூவும்படியான அந்த நிகழ்ச்சி யாதாயிருக்கும் என்று யோசித்து எதுவும் புரியாததால் கேட்டைத் தலைவனை நோக்கிக் கண்களைத் திருப்பிய இளையபல்லவன், அவன் முகத்தில் கோபம் மிதமிஞ்சித் தாண்டவமாடிக் கொண் டிருப்பதையும். சுடும் கண்களை அவன் தன் மகள் மீது திருப் பியிருப்பதையும் கண்டான்.

தந்தையின் அந்த உக்கிராகாரக் கோபத்துக்கு இலக்கான அந்த அழகியின் நிலை எப்படியிருக்கிறதென்பதைப் பார்க்க அவள் மீது திரும்பிய படைத்தலைவனின் கூரிய கண்கள் மறுகணம் பெருவியப்பைக் கக்கின. தந்தையின் கூச்சலால் இம்மியளவும் உணர்ச்சி வசப்படாத அந்த மஞ்சளழகி, கோட்டைத் தலைவனை நோக்கி மௌனமாகவே மந்தகாசமே செய்தாள். தந்தையின் கூச்சலைக் கேட்டதும் அவள் தலை அவனை நோக்கித் திடீரெனத் திரும்பியதில் குழல் அசைந்து மயிரிழைகள் தோளின் இருபுறங்களிலும் விழுந்தன.


மருண்ட அவள் செவ்வரி விழிகள் சற்றே திரும்பின. அவ்வளவுதான். மற்றபடி வேறெவ்வித மாறுதலும் அவளிடம் காணப்படவில்லை. ஏற்பட்ட சிறு மாறுதல்களும் கண்ணிமைக்கும் நேரத்தில் நிகழ்ந்தன வாகையால், அவை மாறுதல்களாகவே இளைய பல்லவனின் கூரிய விழிகளுக்கு மட்டுமென்ன அறிவுக்குக்கூடப் புலப்படவில்லை. இடுப்பில் முட்டுக் கொடுத்த கையைக் கூட எடுக்காமல், இருந்த இடத்தை விட்டு அசையாமல், அஞ்சாமல் சிரித்துக் கொண்டே நின்ற அவள் கண்கள் கோட்டைத் தலைவன் மீதே பல விநாடிகள் நிலைத்தன.

அந்தக் கண்களில் ஏதோ பெரும் சக்தி இருக்க வேண்டுமென்பதைச் சில விநாடிகளுக்குள் புரிந்து கொண்ட இளையபல்லவனின் வியப்பு பன்மடங்கு விரியலாயிற்று. மஞ்சளழகியின் கண்கள். கோட்டைத் தலைவன்மீது நிலைத்த ஒவ்வொரு விநாடியிலும் அவன் முகத்தில் மாறுதல் ஏற்பட்டு வந்ததையும், ஆரம்பத்தில் அதில் விரவிக்க கிடந்த கோபமும் சிறிது சிறிதாக மறைந்து விட்டதையும் கண்ட இளைய பல்லவன். அந்தப் பெண் அந்த அறையில் மட்டுமல்லாமல் அக்ஷய முனையிலேயே ஒரு பெரும் சக்தியென்பதையும், தன் திட்டங்கள் நிறைவேற அவள் உதவி மிகவும் அவசியமென்பதையும் சந்தேகமற அறிந்து கொண்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடியட் திரைவிமர்சனம்




ராஜா காலத்தில் அவர்களை ஏமாற்றி சொத்துக்களை தன்வசப் படுத்திக் கொள்பவர்கள் ஸ்மிதாவின் (நிக்கி கல்ராணி) முன்னோர்கள். கதாநாயகியாக வரும் ஸ்மிதா மனநல மருத்துவராக இருக்கிறார். மறுபுறம் வீரபாண்டியன் என்ற கிராமத்தில் ஊர் தலைவராக இருக்கும் ராசு (ஆனந்தராஜ்) அவருடைய மகன் சின்னராசு (சிவா) மற்றும் குடும்பத்துடன் வசித்து வருகிறார்.

ஒரு சிறிய விபத்தில் சின்னராசு மனநலம் பாதிக்கப்பட்டவராக மாறி விடுகிறார். அச்சமயத்தில் அவருக்கு சிகிச்சை கொடுக்க ஸ்மிதா பணிபுரியும் மனநல மருத்துவமனைக்கு அழைத்து செல்கின்றனர். அப்பொழுது சின்ன ராசுவிற்கு ஸ்மிதா மீது காதல் ஏற்படுகிறது. இது ஒரு பக்கம் இருக்க மறுபுறம் தன் காதலனை உயிர்ப்பிக்க ஸ்மிதாவின் உயிரை எடுப்பதற்காக நீலகண்டி (அக்ஷரா கவுடா) என்ற சூனியக்காரி வலம் வருகிறாள்.

அதேபோன்று 4 அடியாட்களுடன் வில்லன் ரவிமரியா, ஸ்மிதாவை கடத்திச்சென்று பணம் பறிக்க முயற்சி செய்கிறார். இவர்கள் அனைவரும் ஒரு பழைய பங்களாவில் மாட்டிக்கொள்கிறார்கள். அங்கிருந்து எப்படி தப்பித்து செல்கிறார்கள்? நீலகண்டி தன் நோக்கத்தை அடைய ஸ்மிதாவின் உயிரை எடுத்தாளா? காதலியை சின்னராசு கரம் பிடித்தாரா? என்பதே இப்படத்தின் மீதிக்கதை.

வழக்கம் போல் பேய் படங்களுக்கு உரித்தான பழைய பங்களாக்களில் நடக்கும் கதை என்பதால் பெரிதாக சுவாரசியம் இல்லை. தில்லுக்கு துட்டு படங்களில் இடம்பெற்ற காமெடிகளை எதிர்பார்த்து சென்ற ரசிகர்களுக்கு சற்று ஏமாற்றமே. இயக்குனர் ராம்பாலா முந்தைய படைப்புகளை போன்ற நகைச்சுவை கொடுக்காதது படத்தின் சரிவு. ஆரம்பத்திலிருந்தே படம் அதன் நிலைப்பாட்டில் இருந்து விலகி எங்கெங்கோ செல்கிறது. கதையிலும் திரைக்கதையிலும் அதிக கவனம் செலுத்தியிருக்கலாம் என்பதே மக்களின் கருத்து.

கதாநாயகனாக வரும் சிவா அவருடைய யதார்த்த காமெடி கலந்த இயல்பான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். இருந்தும் படத்தின் காமெடிகள் சாதாரணமாக இருந்ததால் படத்தில் பயணிக்க சிரமமாக இருந்தது. கதாநாயகிகளாக வரும் நிக்கி கல்ராணி, அக் ஷரா கவுடா இருவரும் அவர்களுடைய பணியை சிறப்பாக செய்து முடித்துள்ளனர். ஆனந்த்ராஜ், ஊர்வசி, மயில்சாமி, சிங்கமுத்து, ரவிமரியா, ரெடின் கிங்ஸ்லி ஆகியோர் முதிர்ச்சியான நடிப்பை வெளிப்படுத்தி பாராட்டை பெற்றுள்ளனர்.

ஒளிப்பதிவாளர் ராஜா பட்டாசர்ஜி தன் பணியைச் சிறப்பாக செய்து முடித்துள்ளார். காட்சியமைப்பின் மூலம் படத்தின் விறுவிறுப்பை ஏற்படுத்த முயற்சி செய்துள்ளார். விக்ரம் செல்வா இசை மற்றும் பின்னனி இசை அதிகம் ஈர்க்கவில்லை.

மொத்தத்தில் 'இடியட்' ஏமாற்றம்.

## புதிய படத்தின் போஸ்டரை வெளியிட்ட பா.ரஞ்சித்




தமிழ் சினிமாவில் இயக்குனராகவும், தயாரிப்பாளராகவும் வலம் வரும் பா.ரஞ்சித் புதிய படத்தின் போஸ்டரை வெளியிட்டார்.

அட்டக்கத்தி, மெட்ராஸ், சார்பட்டா பரம்பரை போன்ற படங்களை இயக்கிய பா.ரஞ்சித் தயாரிப்பாளராகவும் பயணித்து வருகிறார். இவர் "நீலம் புரொடக்சன்ஸ்" தயாரிப்பில் பரியேறும் பெருமாள், இரண்டாம் உலக போரின் கடைசி குண்டு, ரைட்டர், குதிரைவால் போன்ற படங்கள் வெளியாகி வெற்றி பெற்றது.

இந்நிலையில் அறிமுக இயக்குனர் சுரேஷ் மாரி இயக்கும் படத்தை "நீலம் புரொடக்சன்ஸ்" சார்பில் பா.ரஞ்சித் தயாரிக்கவுள்ளார். "அட்டகத்தி" தினேஷ் நடிக்கும் இப்படத்திற்கு "J.பேபி" என்ற தலைப்பு வைக்கப் பட்டிருக்கிறது. இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை பா.ரஞ்சித் அவருடைய சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டு வாழ்த்துக்கள் கூறியுள்ளார். அந்த போஸ்டரில் அட்டகத்தி தினேஷ், ஊர்வசி, லொள்ளு சபா மாறன் இடம் பெற்றுள்ளனர். இந்த போஸ்டர் தற்போது வைரலாகி வருகிறது.

வாழ்த்துகள் @Sureshmariiizh, நீங்கள் மனிதர்கள் மேல் வைத்திருக்கும் எதிர்பார்க்காத அன்பை, நாம் உருவாக்கியுள்ள JBaby படத்திலும் காண கிடைத்தது. உங்கள் திரையுலக வாழ்க்கை சிறக்கட்டும். இப்படம் உருவாக்க உழைத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றி !!

## டைட்டானிக் படத்தின் ரிலீஸ் திகதி அறிவிப்பு




ஜானகிராமன் இயக்கத்தில் கலையரசன், ஆனந்தி நடிப்பில் உருவாகி இருக்கும் டைட்டானிக் படத்தின் ரிலீஸ் திகதியை படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.


ஜானகிராமன் இயக்கத்தில் கலையரசன், ஆனந்தி, ஆஷ்னா சவேரி, காளி வெங்கட் உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகியுள்ள படம் "டைட்டானிக்" காதலும் கடந்து போகும்". சி.வி.குமார் தயாரிப்பில் உருவாகியுள்ள இந்தப் படத்துக்கு நிவாஸ் கே.பிரசன்னா இசையமைத்துள்ளார்.

இப்படத்தின் படப்பிடிப்புகள் நீண்ட நாட்களுக்கு முன்னதாகவே முடிக்கப்பட்டு ரிலீசுக்கு தயாரானது. பின்னர் கொரோனா ஊரடங்கு காரணமாக நேரடியாக ஓடிடி தளத்தில் வெளியாக இருப்பதாக தகவல்கள் வெளியானது. தற்போது மே 6ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாக இருப்பதாக படக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

| | | |
|---|---|---|
| திரைப்படம் | : | அன்பு எங்கே |
| இயற்றியவர் | : | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் |
| இசை | : | வேதாச்சலம் |
| பாடியவர் | : | டி.எம். சௌந்தரராஜன் |



ஹேய்...யா...டிங்கிரி டிங்காலே
மீனாட்சி டிங்கிரி டிங்காலே
உலகம் போற போக்கப் பாரு தங்கமே தில்லாலே
ஹா டிங்கிரி டிங்காலே மீனாட்சி டிங்கிரி டிங்காலே
உலகம் போற போக்கப் பாரு தங்கமே தில்லாலே

அதிகமாகப் படிச்சுப் படிச்சு மூளை கலங்கிப் போச்சு
அணுகுண்டைத் தான் போட்டுகிட்டு அழிஞ்சு போகலாச்சு
அதிகமாகப் படிச்சுப் படிச்சு மூளை கலங்கிப் போச்சு
அணுகுண்டைத் தான் போட்டுகிட்டு அழிஞ்சு போகலாச்சு
அறிவில்லாம அடக்கிப்புட்டா மிருகமின்னு சொன்னோம்
அந்த மிருகமெல்லாம் நம்மைப் பாத்து
சிரிக்குதென்ன செய்வோம்

உலகம் போற போக்கப் பாரு தங்கமே தில்லாலே
டிங்கிரி டிங்காலே மீனாட்சி டிங்கிரி டிங்காலே

ஐயா வரவப் பாத்து வீட்டில் ஏங்குறாங்க அம்மா
அந்த ஐயா இங்கே கும்மாளந்தான்
போடுறாரு சும்மா ஹஹான்
ஐயா வரவப் பாத்து வீட்டில் ஏங்குறாங்க அம்மா
அந்த ஐயா இங்கே கும்மாளந்தான் போடுறாரு சும்மா
அப்பன் பாட்டன் ஆஸ்தியெல்லாம் சிகரெட்டாக மாறி
ஐயா வாயில் புகையுது பார் ஐயம் வெரி சாரி

உலகம் போற போக்கப் பாரு தங்கமே தில்லாலே
டிங்கிரி டிங்காலே மீனாட்சி டிங்கிரி டிங்காலே (2)

கறியும் கூட்டும் சோறும் தின்ன மாட்டார் இந்த மைனர்
காஞ்சு போன ரொட்டித் துண்டும் சூப்பும் இவரு டின்னர் (2)

குறுக்கு வழியில் பணத்தை சேர்க்க இந்த மனுசன் ஆச
குதிரை வாலில் கொண்டு போயி கட்டிடுவார் காச

உலகம் போற போக்கப் பாரு தங்கமே தில்லாலே
டிங்கிரி டிங்காலே மீனாட்சி டிங்கிரி டிங்காலே (2)

கண்ணும் கண்ணும் பேசிக்குது மூக்கும் மூக்கும் முட்டுது
பொண்ணும் ஆணும் ஜோடி போட்டு கையைக் காலை ஆட்டுது
கண்ணும் கண்ணும்

கண்டவங்க மண்டையெல்லாம் தாளத்தோட ஆடுது
காலு கையி உடம்பையெல்லாம் தூக்கித் தூக்கிப் போடுது

உலகம் போற போக்கப் பாரு தங்கமே தில்லாலே
டிங்கிரி டிங்காலே மீனாட்சி டிங்கிரி டிங்காலே (2)
ஹஹா ஹாஹ்ஹா ஹஹா ஹாஹ்ஹா

ஆ...டிங்கிரி டிங்காலே மீனாட்சி டிங்கிரி டிங்காலே
உலகம் போற போக்கப் பாரு தங்கமே தில்லாலே (2)
ஹஹா ஹாஹ்ஹா

# இன, மத நல்லிணக்கமே டொலருக்கான புதிய வழி

சுதந்திரம் பெற்று எழுபது வருடங்களுக்கும் மேலாக, எந்தவிதத் தொய்வும் இல்லாமல் பொருளாதார ரீதியில் அமைதியாக நகர்ந்து கொண்டிருந்த இலங்கைத் தேசமானது. தற்பொழுது ஒரு சிறந்த பொருளாதார கட்டமைப்பு இல்லாத முறையற்ற ஒரு இன-மதவாத ஆட்சியினால் சர்வ தேசத்தின் முன் அநாதரவாக நொண்டியாகி நிற்கிறது.

முப்பது வருடங்களுக்கும் மேலாக நிகழ்ந்த உள்நாட்டு போரில் கூட, ஒரு முறையான அல்லது ஒரு சீரான பொருளாதாரக் கட்டமைப்பை ஓரளவு தன்னகத்தே வைத்துக் கொண்ட இலங்கைத் தேசமானது இன்று பாரிய பொருளாதார வீழ்ச்சியினால் மீண்டும் எழுந்து வர முடியாத ஒரு நிரந்தர சூழலே தற்பொழுது வரை நிலவி வருகின்றது.

வெறும் தேயிலை, ஆடை ஏற்றுமதிகள் மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவற்றை மட்டும் நம்பியிருந்ததால், அதற்கு ஈடான மாற்று பொருளாதார சிந்தனைகளை இதுவரை ஆட்சிக்கு வந்த எந்த சிங்கள பேரினவாத அரசுகள் சற்றும் சிந்தித்துப் பார்க்காத ஒரு சூழ் நிலையில்தான் இன்றைய இலங்கையின் பொருளாதாரம் பெரும் கேள்விக்குறியாகி வலிமையிழந்து நிற்கிறது.

இலங்கையின் சிறுபான்மையினரான தமிழர்கள் மீதும் முஸ்லிம்கள் மீதும் இன ரீதியாக, மத ரீதியாக காழ்ப்புணர்ச்சி கொண்டு தென்னிலங்கை அரசியல்வாதிகளும் பௌத்த மத தேரர்களும் தொடர்ச்சியாக அவர்களை வஞ்சித்து படிப்படியாக ஒடுக்குமுறைக்கு உள்ளாக்க நினைத்த ஒவ்வொரு விநாடியிலும் தங்கள் தாய்த் தேசமான இலங்கை படுபாதாளத்துக்குள் விழுந்து கொண்டு இருக்கின்றது என்பதை அவர்கள் இறுதிவரை உணரவே இல்லை என்பது அவர்களின் அறியாமையை சர்வதேசத்தின் முன் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

புத்தரின் காருண்யம் மிகுந்த ஆன்மிகக் கொடிகளை விட, தங்கள் இனவாத, மதவாத அரசியல் கொடிகளே இலங்கைத் திருநாட்டில் உயரப் பறக்க வேண்டும் என்ற பக்குவமற்ற துவேச சிந்தனைகளும் நவீன துட்டகெமுனுக்களே எம் எதிர்காலத்துக்குத் தேவை என்ற தென்னிலங்கை மக்களின் தீர்க்க தரிசனமற்ற யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களும் சமகால இலங்கை மக்களின் தவிர்க்க முடியாத நீண்ட வரிசைக்கு ஒரு வழியாக இக்கட்டான பாதை அமைத்துக்கொடுத்திருக்கின்றது எனலாம்.

ஒரு தேசத்தில் பட்டினியால் இறந்த ஒருவனை வெறும் சந்தன பேழையில் கொண்டு செல்வதல்ல உண்மையான அபிவிருத்தி. முதலில் அந்த தேசத்து மக்களின் இரப்பை நிரம்புவதே ஒரு ஜனநாயகத் தேசத்தின் முதன்மை நிறைந்த அபிவிருத்தியாகும் என்பதை சிங்கள பௌத்த பேரினவாத அரசுகள் இதுவரை அறிந்து கொள்ளச் சற்றும் முயற்சி செய்யவில்லை என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.


அயல் தேசங்களிடம் அபிவிருத்தி எனும் பெயரில் கடனுக்கு மேல் கடனை வாங்கி அதை திருப்பிச் செலுத்துவதற்காக சொந்த தேசத்து மக்களின் வரியை மட்டும் நம்புவதால் ஒரு தேசம் பொருளாதாரத்தில் ஒருபோதும் தன்னிறைவைக் காண முடியாது.

இறுதியில் வாங்கிய கடனை வட்டியும் முதலுமாக திருப்பிச் செலுத்த முடியாத பட்சத்தில் தேசத்தையும் அதன் இறையாண்மையையும் கடன் வாங்கிய தேசங்களிடமே இழக்க வேண்டிய சூழல் ஏற்படலாம்.

ஒரு தேசத்தின் மக்களுக்கான அரசு மக்களின் வாழ்வில் தேவைப்படும் அனைத்து அடிப்படை விடயங்களையும் மக்கள் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் இருக்கும் போதே மக்களுக்கு கொடுத்து விடும் என்று மக்கள் நம்புவதே பெரும் ஜனநாயகமாகும்.

அங்கு வெறும் காட்சிகள் இல்லை செங்கோல் வழுவாத அறம் நிறைந்த ஆட்சிகள்தான் நடை பெறுகின்றன என்று அர்த்தம் கொள்ளப்படும். அப்படிப்பட்ட அறம் நிறைந்த உயிர்ப்பான ஆட்சி இலங்கைத் திருநாட்டில் உண்டா...? என்றால் பதில் வெறும் மௌனமே.

வெறும் ஜோதிட சிந்தனைகளை நம்பி ஆட்சி செய்வதால் மட்டும் டொலர் வானத்தில் இருந்து ஒருபோதும் கொட்டி விடாது. தேசத்தின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு ஒரு தீர்க்கதரிசனமான சிந்தனையின் ஊடாக தொடர்ச்சியான செயற்றிறனை புத்துணர்ச்சியுடன் மக்கள் மத்தியில் செயற்படுத்துவதிலேதான் வங்குரோத்து அடைந்துள்ள இலங்கைத் தேசத்தின் பொருளாதாரத்தை மீண்டும் பழைய நிலைக்கு இட்டுச் செல்ல முடியும் என நம்பலாம்.



ஒரு தேசத்தில் ஒரு தனிப்பட்ட பெரும்பான்மை இனத்தையோ அல்லது அங்கு பெரும்பான்மையாக இருக்கும் மதத்தையோ அதன் ஆட்சியாளர்களும் அந்த மதவாதிகளும் தூக்கிப் பிடித்து ஆட்சியதிகாரத்தை கையாள்வதால் எந்த விதமான இன-மத ரீதியான நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தி விட முடியாது.

கடந்த காலத்தின் கடும் கசப்பான உணர்வுகளால் மூன்று பிரிவுகளாக பிரிந்து நிற்கும் இலங்கை வாழ் மக்கள் அனைவரும் தேசத்தின் பொருளாதாரம் என்ற இலக்கை நோக்கி ஒரு புள்ளியில் இன-மத பேதங்களை மறந்து அரசியல்வாதிகளையும் மதவாதிகளையும் முற்றாக புறக்கணித்து ஒன்றிணைவதன் மூலமே சுயநலன்களைத் துறந்த புத்தர்களாகவும் தியாகங்களை ஏற்கும் கிறிஸ்துக்களாகவும் சத்தியத்தை பின்பற்றும் காந்திகளாகவும் நிச்சயம் இலங்கை வாழ் மூவின மக்கள் அனைவரும் மாற முடியும்.

**சாம்.ரமேஷ்குமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மச்சு பிச்சு (பெரு)



அதோடு தொடக்க காலத்தில் பெருவில் பயணம் செய்த காம்டெ தெ சார்டிகஸ் என்பவரின் குறிப்புகளும் பிங்காமுக்கு கிடைத்தன. இதன் அடிப்படையில் பிங்காம், இன்காக்களைப் பற்றி தேட முயற்சித்தபோது மச்சு பிச்சு நகரத்தின் சிதிலமடைந்த பகுதிகளையும், கல் வீடுகளையும் கண்டுபிடித்தார்.

கஸ்கோவிலிருந்து 50 மைல் தொலைவில் உள்ள இன்றைய அக்குவாஸ் கலியந்திஸ் என்ற ஊருக்கு அருகில் மச்சு பிச்சு நகரம் இருந்ததை அவர்தான் தோண்டி எடுத்து உலகுக்கு அறிவித்தார்.

கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் அந்த இடங்களை சுத்தம் செய்வதற்கும், எலும்புக்கூடுகளை அப்புறப்படுத்துவதற்குமே செலவிட்டார். (இன்காக்கள் வனப்பகுதிகளில் சென்று தங்கியபின் அவர்கள் உருவாக்கிய வில்காபம்பா நகரை 1964 இல் ஜெனி சாவெ என்பவர் கண்டுபிடித்தார்.)

இன்காக்கள் சூரியன் சந்திரன் மற்றும் நட்சத்திரங்களை வணங்கி வந்திருக்கின்றனர். சில முடிச்சுகள் கொண்ட கயிறுகள் மூலம் கணக்கிடும் முறையை அவர்கள் பயன்படுத்தியதையும், அதற்குப் பெயர் கிப்பு என்பதையும் அவரது ஆய்வுகள் வழியே தெரிந்து கொள்ள முடிந்தது.

மற்றபடி அவர்கள் எப்படி அத்தனை உயரத்துக்கு கற்களை கொண்டு சென்றார்கள். அவர்களது கட்டடக்கலைத் தொழில் நுட்பம் எப்படியானது என்பது பற்றியும் விரிவாக அடுத்த தலைமுறை அறிய முடியாதபடி அவர்களது மொழி வளமற்றதாக இருந்திருக்கிறது.

பெரும்பாலான தேசங்களில் வாழ்ந்து வந்த பல்வேறு இனமக்கள் மருத்துவம், அறிவியல், கலை, வானவியல், இலக்கியம், ஆகியவற்றில் தன்னிகரற்ற அறிவும், சாகசமும், கடின உழைப்பும் மிக்கவர்களாக இருந்தாலும் வரலாற்றை பதிவு செய்யும் வழக்கமும், ஆர்வமும் இல்லாதவர்களாக இருந்ததால் அந்த நுட்பங்களை எல்லாம் மனித குலம் இன்று இழந்து நிற்கின்றது.

இன்கா மக்களின் மொழி, எழுத்து வடிவம் இல்லாததால் அவர்களது மேம்பட்ட ஞானம், திறன் ஆகியன அவர்களது இன மக்களோடு புதைந்தே போனது.

கார்பன் டேட்டிங் போன்ற இன்றைய தொழில் நுட்பம் மூலம் அவர்கள் வாழ்ந்த வருடங்களை கணிக்க முடிந்ததே தவிர அவர்களது முழுமையான வரலாற்றை மீட்க முடியவில்லை.

1983 இல் யுனெஸ்கோ அமைப்பு மச்சு பிச்சுவை புராதானச் சின்னமாக அறிவித்தது. சிலியின் புரட்சிகர கவிஞன் பாப்லோ நெரூடா, மச்சு பிச்சுவின் வனப்பில் மயங்கி ஒரு கவிதைத் தொகுப்பையே எழுதி வெளியிட்டிருக்கிறார்.

வரலாற்றைப் பதிவதன் மூல மும், மீட்டெடுப்பதன் மூல முமே மனிதகுலம் மேம்படைய முடியும். அதற்கு உலக அதிச யங்கள் போன்ற பட்டியல் களை உருவாக்குவது அதன் மீதான அக்கறையையும் கவ னத்தையும் அதிகப்படுத்தும்.

(தொடரும்...)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2555

### அகரன்



உலகமே துணை இருந்தாலும்
கட்டின பொண்டாட்டி இல்லைனா...
எவனும் அநாதைதான் ஆனால் இருக்கும்
போது நிறைய பேருக்கு தெரிகிறதே இல்லை

### காயத்திரி

இழக்க இனி ஒன்றும் இல்லை என்றவுடன்
ஒரு துணிச்சல் வரும் பாருங்கள்...



அதுதான் "நீங்கள்"

### புவனா



முன்று நாட்களாக
பசி இல்லை என
மருந்து கேட்டார்
பணக்காரன்

அந்த வியாதி
எனக்கு வராதா
டாக்டர் என
கவலையுடன்
கேட்டார் ஏழை...!

### தாசன்

திருமணம் முடித்து புகுந்த வீடு செல்லும்
போது பெண்கள் அழுவதும்



சென்ற பின் ஆண்கள் அழுவதும்
உலக வழக்கம்

### மரியா

ஏமாற்றுபவர்களை கண்டு
ஏமாந்து போன
நெஞ்சம்!

நல்லவர்களை கண்டாலும்
நம்ப மறுக்கிறது
மனது...

### சுரேக்கா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுகமான விடியல்

285

# பனையின் உன்னதமான சத்துணவுகளை நாம் உதாசீனப்படுத்துவது ஏன்?

எமது கலாசாரத்தின் அடையாளமாக வரட்சியைத் தாங்கும் தூணாக கற்பக தருவாக சித்திரிக்கப்படும் பனை மரங்கள் பாவம். எமது மத்தியில் தோன்றியதால் பல கஷ்டங்களையும் அவமதிப்புக்களையும் தாங்கி நிற்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

இதே பனை மரங்கள் அபிவிருத்தி அடைந்த வல்லரசு நாடுகளிலே செழித்து வளரக் கூடியனவாக இருந்திருந்தால் பனம் பழங்கள் ஒவ்வொன்றும் ஈய உறைகளிலே சுற்றப்பட்டு அதன் மேல் ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டு பாரிய விளம்பரங்களு டன் இங்கு இறக்குமதியாகி வந்தி ருக்கும்.

இலகுவில் ஏமாறக் கூடிய மனம் படைத்த நாமும் பணத்தை வாரி இறைத்து அவற்றை வாங்கி உண்டிருப்போம். இதே பனை மர ங்கள் அமெரிக்கா தேசத்திலே வளருபவையாக இருந்திருந்தால் பனங்கிழங்குகளின் மருத்துவக் குணங்களை உலகறிந்திருக்கும்.

கருப்பட்டிகள் அருமருந்தாகச் சித்திரிக்கப்பட்டிருக்கும். நுங்குகளின் மகத்துவம் பேசப்பட்டிருக்கும். ஒடியல், புழுக்கொடியல், மா வகைகள் உலக சந்தையிலே பெரும் இடத்தைப் பிடித்திருக்கும். பனையின் ஒவ்வொரு பகுதிகளும் உலகின் உபயோகத்திற்கு வந்தி ருக்கும்.

ஆனால் பாவம் இந்தப் பனை மரங்கள் பாவப்பட்ட எம் மக்கள் மத்தியிலே தோன்றி பொலிவிழந்து காணப்படுகிறது.

பானங்களிலே அதிகூடிய புரதச் செறிவுடைய பானம் நுங்கு என்பது நம்மில் பலருக்கு தெரியாது. பால் தான் புரதச் செறிவுடைய பானம் என்று நினைத்துக் கொள்கிறோம். 100g பாலிலே 3.3g புரதம் இருக்கிறது. ஆனால் 100g நுங்கிலே 10.8g புரதம் இருக்கிறது. பாலினைப்போல் 3 மடங்கு புரதச் செறிவுள்ள பானம் நுங்கு என்பதை மனதில் நிறுத்துவோம்.

நுங்கினுடைய உலர் நிறையிலே 60% புரதமும் 30% மாப்பொருளும் இருப்பதுடன் மிகக் குறைந்தளவு கொழுப்பே இதனில் காணப்படு கிறது.



பனங்கூடல்களுக்குள் வசி க்கும் எமது சிறார்கள் புரதக்குறைபாட்டினால் அவதியுறுகின்றனர். ஆனால் அவர்களுக்கு இந்த நுங்கின் மகத்துவம் சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை.

எம்மத்தியிலே ஒரு கோடிக்கும் அதிகமான பனைகள் இருந்தும் அவற்றில் இருந்து கிடைக்கும் பனம் பழங்களில் 5 வீதமான பனம் பழங்கள் கூட உபயோகப்படுத்தப்படுவதில்லை. வண்டுகளிடமிருந்தும் புழுக்களிடமிருந்தும் அவற்றை முற்றாகக் காப்பாற்றி அனைத்துப் பழங்களையும் முழுமையாகப் பயன்படுத்துவது எப்படி என்பது சம்பந்தமான வழிமுறைகளை நாம் ஆராயவில்லை.

புரதச்சத்து நிறைந்த விற்றமின்கள், கனியுப்புக்கள் நிறைந்த எமது அரும் சொத்தான பனம் பழங்கள் வீணடிக்கப்பட்டு மண்ணுக்கு உரமாகிக் கொண்டிருக்கின்றன.

பனம் பழங்களின் உலர் நிறையில் 11 வீதம் புரதமும் பெருமளவு பீட்டா (-) கரோட்டினும் ஏனைய விற்றமின்களும் இரும்பு, கல்சியம் போன்ற கனியுப்புக்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்தப்பனம் பழங்களை மக்கள் விரும்பி உண்ணக்கூடிய வகையில் எவ்வாறு மாற்றங்கள் செய்வது என்பது சம்பந்தமான பல ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். சோடாவுக்கு மாற்றீடாக பனம் பழங்களிலிருந்து பல வகையான சுவையான பானங்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும். இடியப்பத்தினுள்ளும் பிட்டினுள்ளும் பனங்களி சேர்த்து சமைப்பதன் மூலம் அவற்றின் சுவை யும் நிறமும் ஊட்டச்சத்தும் மெருகு பெறும் என்பது சொல்லிக்கொடுக் கப்பட வேண்டும். பனங்களிகளை இலகுவில் பிரித்தெடுப்பது பாதுகாக் கும் பொறிமுறைகள் கண்டறியப்பட வேண்டும்.

பனம் பழங்களின் மருத்துவக் குணங்களும் அதிலே காணப்படும் நோய் எதிர்ப்புத் தன்மையும் விஞ்ஞானபூர்வ ஆராய்ச்சிகள் மூலம் உறுதி செய்யப்படவேண்டும். இந்த முயற்சி வெற்றி அளிப்பின் நாம் பனம் பழங்களை ஈய உறைகளில் சுற்றி அவற்றில் ஸ்ரிக்கரும் ஒட்டி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய நிலையும் ஏற்படலாம்.

பலவிதமான விளம்பர யுத்திகளுடன் இறக்குமதியாகி அதிக விலையில் விற்பனையாகும் ஓட்ஸ் வகைகள் எமது அன்றாட உணவுகளில் ஒன்றாக மாறும் நிலை காணப்படுகிறது. ஆனால் எமது சொந்த மண்ணில் விளையும் ஓட்ஸிலும் சிறந்த அதிக நார்த்தன்மை கொண்ட மலிவான இயற்கையான பனங்கிழங்குகளை நாம் புறக்கணி த்து விடுகின்றோம். பனங்கிழங்கு கள் அதிகளவு நார்த்தன்மையும் மிகக்குறைந்தளவு கொழுப்பும் கொண்டிருப்பதுடன் உலர் நிறையில் 12 வீத புரதத்தையும் பலவிற்றமின்கள், கனியுப்புக்களையும் கொண்டிருக்கின்றன.

பனங்கிழங்குகளில் இருக்கும் மாப்பொருளானது குறைந்த வேகத்திலே உடலினுள் அகத்துறிஞ்சப்படுவதால் இது நீரிழிவு நிலை உள்ளவர்களுக்கும் ஒரு சிறந்த உணவாக காணப்படுகின்றது. பனம் பழங்களின் பயன்கள் அனைத்தையும் எடுத்த பின்பு அதன் விதைகளை பனம்பாத்தி போடுவதன் மூலம் பனங்கிழங்குகளை பெற்றுக்கொள்ள முடியும். இதன் மூலம் பனம்பழங்களும் பனம் விதைகளும் பயனுடையவையாக மாற்றம் பெறும். அத்துடன் பனங்கிழங்குகளை பதப்படுத்தி

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org